# தமிழ் நிலம்

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

## பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி -2[illegible] | தி.பி. 2015 | கன்னி 7 (23-9-84) | 65 காசுகள் | இதழ் எண் : 45 | பகுதி 37-39

# ஆந்திராவின் அரசியல் நெருக்கடி ஒன்றும் புதிதான கதை அன்று!

# நேருவின் காலத்திலேயே இதுபோல் பல நாடகங்கள் நடந்திருக்கின்றன!




ஏரலில் திறந்து வைக்கப்பெற்ற திருவள்ளுவர் சிலை.

## தந்தையின் சூழ்ச்சியையே இந்திராகாந்தி பின்பற்றுகிறர்!

### அரசியல் அமைப்புச்சட்டத்தில் உள்ள ஓட்டைகளே இதற்குக் காரணங்கள்!

(முன்குறிப்பு :
இக் கட்டுரை 15-9-84-க்கு முன்னர் எழுதப்பெற்றது எனவே என். டி. இராமராவ் பற்றிக் கூறியுள்ள சில முன்கருதுதல்கள், பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்டிருக்கலாம். இருப்பினும் சட்டநிலையில் ஆந்திராவில் மட்டுமன்று, இந்தியாவில் வேறெங்கும் நடைபெற்ற, நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு மாறுபாடானவை அல்ல. இந்த நிலையில் என்ன வகையான வெற்றி கிடைத்தாலும், அவையும் இந்திராவின் சூழ்ச்சிகளுக்கு உட்பட்டவையே!)

ஆந்திராவில் பெரியதோர் அரசியல் நிலநடுக்கமே (பூகம்பமே) தோன்றியுள்ளது. இராமராவ் கட்சியினர் எரிமலையாக வெடித்துக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும் சூழ்ச்சியே நிறைந்து, அனைத்ததிகார (சர்வாதிகார) வெறி கொண்டலையும், இந்திராகாந்தி என்னும் அதிகார இமயமலைக்கு முன் இராமராவின் வெடிப்புகள் தீக்குச்சி உரைசல்களாகவே போய்விடும் என்பதில் நமக்கு எள்ளளவும் ஐயமில்லை, வெறும் அரசியல் தெளிவில்லாதவர்களே, வேறுவேறு வகையான தீர்வுகளை எதிர்பார்த்து தாங்களும் ஏமாறி, மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள்! முடிவு மட்டும் ஏற்கனவே செய்யப்பட்டதுதான்!

முன்னால் ஆந்திர ஆளுநர் (கவர்னர்) இராம்லால் இந்திராவுக்கு எதிரான இராமராவின் கையோங்கத்தை விழ்த்துவதற்காகவேதான், இந்திராவின் சூழ்ச்சிப்படி, பாசுக்கரராவை முதலமைச்சராக்கினர். இந்தவகையில், இன்றைக்கு இந்தியாவில் உள்ள யாரையும் விட இந்திராகாந்தி மிகு தந்திரமிக்க ஓர் அரசியல் திறமும், சட்டங்களை எவ்வாறு தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்னும் சட்ட நுணுக்கமும் தெரிந்தவர் என்பதை, அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஆந்திரச் சிக்கல் பற்றிய சிறப்புக் கட்டுரை

இதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. அவர் செய்த, செய்கின்ற செய்யப்போகின்ற அரசியல் நடவடிக்கைகளை எவ்ரும் அவ்வளவு எளிதில் விளங்கிக்கொள்ள இயலாது. வெறும் ஆட்டு மந்தைகளாக உள்ள, அறியாமையும் ஏழ்மையும் அடிமை மனப்பாங்கும் உள்ள இந்தியப் பொதுமக்களையும், பணத்தாசையும், பதவி வெறியும், ஒழுக்கக் கேடும், உண்மையல்லாத தன்மையும், கோழைத்தனமும் கொண்ட இங்குள்ள படித்த

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

**ஏரல், திருவள்ளுவர் சிலைதிறப்புவிழாச் சிறப்பிதழ்!**

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# கொற்கைத் தமிழ் மன்றம் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

உலகமுதல் பாவலர் தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருமானுக்கு, ஏரல் கொற்கைத் தமிழ் மன்றத்தினர் அமைத்த திருவுருவச்சிலை திறப்பு விழா ஏரலில் 11-8-84 காரிக்கிழமை இரவு 7 மணி அளவில் தொடங்கியது. சிலை திறப்பு விழாவிற்கு முந்திய சிறப்பு ஊர்வலம் சிறுதண்டு நல்லூரிலிருந்து புறப்பட்டு ஏரல் வள்ளுவர் கோட்டத்தை அடைநதது.



தமிழன்னை — ஊர்வலக்காட்சி

தலைவர் திரு. அறவாணன் :

இத்திறப்புவிழாவிற்கு,மேனுள் தக்கார் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளரும் இந்நாள் சென்னை இலயோலா கலலூரித் தமிழ்த் துறைத் தலைவரும் ஆகிய பர். அறவாணன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தித் தரவேண்டும் என்று மன்றச் செயலர் திரு க. ஐயாத்துரை முன்மொழிய திரு யா. பாக்கியராசு வழிமொழிந்தபின் பேரசிரியரின் சீரிய தலைமையில் விழா தொடங்கிற்று.

வரவேற்புரை :

ஏரல் அரசு மகளிர் உயர்பள்ளி மாணவியர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். தமிழ் மன்றச் செயலர் திரு க. ஐயாத்துரை அனைவரையும் பழகு தமிழில் பாங்குற வரவேற்றார். கொற்கைத் தமிழ் மன்றத் தலைவரும், உ.த.மு.க.வின் தென் நெல்லை மாவட்டத் தலைவரும் ஆகிய பெரும் புலவர் ச. சிவசங்கு அவர்கள் அனைவர் வரவுக்கும் நன்றியும் வாழ்த்தும் தெரிவிக்கும் வகையில் மாலைகள் அணிவித்தார். அவர் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் முகுந்தனுக்கு மாலை அணிவித்தபோது எழுந்த மக்கள் ஆரவாரத்திற்கு அளவில்லை.

பாவலரேறு திருவள்ளுவர் சிலையைத் திறந்தார்:

முதல் நிகழ்ச்சியாக உ.த.மு.க.வின் முதல்வர் பெருமகனார் பாவலரேறு அவர்கள் தமிழ்க்குடியின் முதல் குடிமகனும் திருவள்ளுவரின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்தார்கள். ஆர்வலர்களும் தமிழ் அன்பர்களும் இளஞ்சிறார்களும் கைவலிக்கும் வரையில் மலர் மாரி பொழிந்தனர்.

உலகமுதற் புலவரின் சிலையை, இன்றைய முதல் புலவர் திறந்துவைத்த பெற்றியைப் 'பெரிதும் ஏற்புடைத்தே' என்று தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் போற்றின. கழக முதல்வர் அவர்கள் சிலையைத் திறந்து வைத்த காட்சியைக் கண்ட கண்கள் எல்லாம் பேறு பெற்றன என்றே சொல்லவேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டாவதாக அமைந்துள்ள இச் சிலையையும் சிலை திறப்பாளரையும் தம் கண்ணால் காணும் வாய்ப்புப் பெற்ற தமிழ்நெஞ்சங்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தன.

தலைமையுரை :

பேரா. பர். அறவாணன் அவர்கள் ஆற்றிய தலைமை உரை தலையாய உரையாக அமைந்திருந்தது. திருக்குறள் எழுந்த காலத்து இருந்த நிலையையும் இக்காலத்து நிலையையும் ஒப்பிட்டு அறிய உரை ஒன்று நிகழ்த்தினார். அவர் பேச்சில்,' இன்று நாம் ஆரிய வல்லாண்மையை எதிர்த்துப் போர்க்கொடி தூக்குகிறோம். ஆரிய வல்லாண்மையை எதிர்த்து முதன்முதல் போர்க்கொடி தூக்கியவர் திருவள்ளுவர். திருக்குறளை அரங்கேற்றுவதற்கும் சிலர் இடையூறு செய்திருக்கலாம். நான்மறை, மனுநீதி போன்றவற்றை எதிர்த்துத் திருவள்ளுவர் குரல் கொடுத்தமையால் அவர்க்கு எதிர்ப்பு இருந்தது. திருவள்ளுவர் காண விழைந்த இன்பத் தமிழகத்தை உருவாக்குவது நமது கடமை' என்று கூறினார்.

ஈழப்போர் குறித்தும் அவர் எடுத்துரைத்தார். 'இப்போது குரல் கொடுக்கும் இந்தியத் தமிழரும் ஈழத் தமிழரும் ஆங்கிலேயர் காலத்திலேயே ஒன்று சேர்ந்து முறையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தால் தமிழகம் அன்றே விடுதலை அடைந்திருக்கும். நாம் அன்று செயலற்று இருந்ததினாலேயே பிற நாட்டு வரலாற்று ஆசிரியர்கள் 'முன்னோக்கு (தீர்க்க தரிசனம்) இல்லாத தமிழர்கள்' என்று நம்மைக் குறை சொல்கிறார்கள். இனியும் நாம் தூங்காமல் விழிப்பாய்ச் செயல்படவேண்டும்' என்று அறிவுறுத்தினார்

தலைவர் முன்னுரைக்குப்பின் தமிழன்பர்கள் பலர் வாழ்த்தினர்.


நவமணி அடிகள் :

புதுக்கோட்டை, மங்களகிரியைச் சேர்ந்த அருள்திரு நவமணி அடிகள் வாழ்த்திப் பேசினார்கள். இம்மேடையில் ஒரு கத்தோலிக்கக் கிறித்தவத் துறவியைக் காண்பது உங்களுக்கு வியப்பாக இருக்கும். நானும் ஒரு தமிழன். திருவள்ளுவர், மதத்துக்கு அப்பாற்பட்டவர். அந்த அடிப்படையிலேயே இவ்விழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்று நான் வந்திருக்கிறேன். 'நான் இந்து, நான் கிறித்தவன், நான் முசுலிம்' என்று உங்களுக்குள்ளே வேறுபாடு பார்க்காதீர்கள். 'நாம் எல்லாரும் தமிழர்' என்று ஒன்றுபடவேண்டும். தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் நாம் தொண்டாற்றவேண்டும். திருவள்ளுவர் வலியுறுத்திய 'ஒருவனே இறைவன்' என்ற கொள்கையை நாம் பின்பற்றவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

அடிகளார் பேச்சினைக் கேட்ட மக்கள் போப்பு ஐயரும் கால்டுவெல் ஐயரும் ஆற்றிய தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து செய்ய இக் காலத்தும் நவமணி அடிகள் போன்றோர் உள்ளனர் என்பதை எண்ணி மகிழ்வு கொண்டனர்.

புலவர் தமிழ்மாறன் :

அடுத்து, உ.த.மு.க.வின் கொள்கை பரப்புச் செயலர் புலவர் தமிழ்மாறன் மேடையில் முழங்கினார். 'தமிழர்கள் ஒன்றுபடவேண்டும். திருவள்ளுவர் கருத்துகளைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். தெற்கில் உள்ளவர்களை ஓம்புவது தலையாய கடமை என்று வள்ளுவர் கூறுகிறார். இப்போது தெற்கில் உள்ளவர்களாகிய ஈழத்தமிழரை ஓம்புவதும் அவர்கள் நல்வாழ்வு பெறத் தேவையான அனைத்தையும் செய்யவேண்டியது, அவர்களுக்கு உதவவேண்டியது நமது கடமை' என்று அவர் முழங்கிய முழக்கம் கேட்டு மக்கள் விழிப்புக் கொண்டனர்.



கனகவிசயர் கல் சுமக்கின்றார்

உ.த.மு.க. துணைப்பொதுச் செயலர் தென்னவன்கோவும் பிற உ.த.மு.க. உரவோரும்:

உ.த.மு.க.வின் தென் நெல்லை மாவட்டச் செயலர் புலவர் இனநலவேந்தன், உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, நெல்லை மாவட்டத் தமிழாசிரியர் கழகச் செயலர் புலவர் பழனியாண்டி, பத்தமடைப் புலவர் செந்தில் நாயகம், செல்வி செந்தில்நாயகம், சாத்தான்குளம் திருவள்ளுவர் மன்றத்தலைவர் திரு பெ. மு. சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்து உரைத்தனர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் முகுந்தன்

அதன்பின் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் விடுதலைப் போராளர் முகுந்தன் முழங்கினார். ஈழத்து நிலைபற்றியும் பெரும்பான்மையினரான சிங்களவரால் தமிழர் படும் அல்லல்களையும் விடுதலைப் போராட்டம் பற்றியும் போராட்ட வரலாறு பற்றியும் அவர் மக்கள் மனங்கொள்ளும் வகையில் எடுத்துரைத்தார். ஈழம் பற்றிய ஐயங்கள் நீங்கும் வண்ணம் அவர் ஆற்றிய உரை மக்கள் மனத்தைக் கவர்ந்தது. 'உலகில் பிறக்கும் முதல் தன்னாட்சித் தமிழ்நாடு ஈழம்தான். உலகில் பிறக்கும் தன்னாட்சித் தமிழனின் முதல்கொடி ஈழக்கொடி தான். அக்கொடி பறக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை' என்ற அவர் முழங்கியபோது, திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் கையொலி எழுப்பி ஒப்புதல் தெரிவித்தனர். பூட்டிய இருப்புக் கூட்டின் கதவை உடைத்துக்கொண்டு வெளிப்போந்த இத் தமிழீழ அரிமாவின் தலைமையில் உள்ள கூட்டம் பணி முடிப்பது உறுதி என்ற நம்பிக்கை மக்களிடம் வலுப்பெற்றது.



மூவேந்தர் யானை யூர்ந்துவரும் காட்சி

சொல்லாய்வறிஞர் அருளியார் :

பின்னர் சொல்லாய்வு அறிஞர் அருளியர் 'ஊர் தோறும் சிலை' என்னும் பொருளில் பேசினார். ஊர் தோறும் சிலை அமைப்பதைவிடத் திருவள்ளுவரின் அறவுரை,அருளுரையை மனத்தில் கொண்டு தமிழன் ஒவ்வொருவனும் திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழ்வதே நாம் திருவள்ளுவருக்குச் செய்யும் கைம்மாறு என்று அவர் எடுத்துரைத்தார். திருக்குறளின் தொன்மை, இனிமை, கருத்தாழம், முதன்மைச் சிறப்பு போன்றவற்றை விளக்கும் வகையில் குறள் பாக்கள் சிலவற்றிற்கு அரிய விளக்கம் சொன்னார்.

தாமரை பெருஞ்சித்திரனார் :

அடுத்து தமிழ்த்தாய் தாமரை அம்மையார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள் தமிழ்த் தாயின் தலைமகனுக்கு அமைக்கும் சிலை திறப்பு விழாவில் அம்மையார் தமிழ்த்தாயென ஆற்றிய அருளுரை கேட்டுத் தமிழ் நெஞ்சங்கள் எல்லாம் குளிர்ந்தன. அம்மையாரின் அருள் முகத்திற்கு இணையாகாத, தாமரை மலர்கள் கவிழ்ந்து நோக்கின. ஆம் மேடையில் தோரணம் கட்டிருந்த செந்தாமரை மலர்கள் கவிழ்ந்து தொங்கின.

பாவலரேறு உரை :

இறுதியாகத் தமிழினத் தலைவர் பாவலரேறு ஐயா அவர்கள் அரியதொரு இறப்புரை ஆற்றினார்கள். ஐயா அவர்கள் இதற்கு முன்னரும் ஏரலுக்கு வந்து நல்லறிவு கொளுத்தியிருப்பதாலும் உ.த.மு.க. பற்றிய நல்லெண்ணத்தாலும் அன்பர் பலர் திரண்டிருந்தனர். ஐயா அவர்கள் பேசப் புகும்போது இரவு மணி 11 ஆகிவிட்டாலும், கூட்டத்தினர் அமைதியாக அமர்ந்து இறுதிவரை அசைவின்றி ஐயாவின் அருளுரையை ஏற்றனர்.

ஐயா அவர்கள் தமது உரையில் தமிழ், தமிழரின் அன்றைய நிலை குறித்தும் இன்றைய நிலை குறித்தும் ஒப்பிட்டுப் பேசினார். இன்றைய தமிழரின் இழிநிலை கண்டு மனம் நொந்து பேசினார்,

ஐயா அவர்கள் தமது உரையில், 'பண்டைத் தமிழகத்தில் சாதிப் பிரிவுகள் இல்லை. ஆரியர் வருகைக்குப்பின்தான் நம்மிடையே சாதிப் பிரிவுகளும் வேறுபாடுகளும் ஏற்பட்டன. இன்று தமிழுக்கும் தமிழர்க்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளை எல்லாம் களைய முடியாமல் இருப்பதற்குப் பெரும் முட்டுக் கட்டையாய் இருப்பது இச் சாதிப் பிரிவே. எனவே இனியும் நாம் காலம் கடத்தாமல் இச் சாதிப் பிரிவை, சாதிப் பகையை ஒழித்தே தீர வேண்டும். யாரைக் கேட்டாலும் 'நான் தமிழன்' 'நான் தமிழன்' என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் நிலை வர வேண்டும், 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே' என்ற பாவேந்தரின் கூற்றுப்படி நாம் ஒன்றுகி நமது பகையை எல்லாம் மாய்க்க வேண்டும்.

தமிழ் மொழியைப் பேண வேண்டும். தமிழரை முன்னேற்ற வேண்டும். தமிழ் நாட்டை வாழ வைக்க வேண்டும். இதை நிறைவேற்றும் வரை ஓயாமல் உழைக்கவேண்டும்' என்று அரியதோர் உரை நிகழ்த்தினார். இரவு ஒருமணி வரையில் ஐயாவின் உரை நிகழ்ந்தது. தமிழ்த் தலைவரின் பொன்னுரையைத் தமிழ்ப் பெருமக்கள் அசைவின்றிக் கேட்டு இன்புற்றனர்.

அதன்பின் ஏரல் தூய தெரசா நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 'திருக்குறள் அரங்கேற்றம்' என்னும் தெள்ளு தமிழ் நாடகத்தை நடித்து அனைவரையும் மகிழ்வித்தனர். பெரும்புலவர் சிவசங்கு அவர்களால் எழுதப்பட்ட இந்நாடகம் பிறமொழிக் கலப்பின்றித் தனித் தமிழில், 'தனித் தமிழில் நாடகம் எழுத முடியுமா?' என்று கேட்போர்க்கு ஒரு விடையாக அமைந்திருந்தது. ஏரல் றி.டி.றி.ஏ. நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 'வள்ளுவர் வாய்மை அறம்' எனும் நாடகத்தை நடித்தனர். வில்லிசைப்புலவர் அதியமான் ஆக்கிய 'ஒளவையார் வரலாறு' என்னும் வரலாற்றைச் செந்தமிழ் வில்லிசை விறலி செல்வத் தாயம்மான் பாடி மகிழ்வித்தார். சிலை திறப்புவிழா நிகழ்ச்சி இரவு இரண்டு மணியளவில் நிறைவுற்றது.

ஆக்கியோன்: யா. பாக்கியராசு க.மு.,கல்.மு. ஏரல்.

### வல்லதிகார வெறியும், சட்டச் சூழ்ச்சிகளும் குடியரசு அமைப்பையே தகர்க்கின்றன.

# தேசிய இனப் போராட்டமே இதற்கு முடிவு!

## நாடு கூறுகளாகப் பிரிவதை எதிர்காலத்தில் தடுக்க முடியாது!

## வரலாற்றுச்சான்றுகளுடன் பாவலரேறு அவர்களின் அரசியல்தெளிவுரை!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்களையும் எப்படி ஆட்டிப்படைத்துத் தாம் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பது, இந்தியாவிலேயே, இன்றுள்ள நிலையில் இந்திராகாந்திக்கு மட்டுமே தெரியும். எனவேதான், அவரிடம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, போராடி வெற்றி காண்பதற்கு ஒருவரும் இதுவரை முன்வரவில்லை. போராட வந்த மொரார்சிதேசாய், சகசீவன்ராம் போன்ற அரசியல் தந்திரமும், பணவலிவும், மக்கள் சாய்காலும் பெற்றவர்களும், சரண்சிங், வாசுபேயி போன்ற பதவியாசைக்காரர்களும், செயப்பிரகாசர், சந்திரசேகர் போன்ற அரசியல் நேர்மையாளர்களும், என்.டி. இராமராவ் போன்ற அரசியல் நேர்மையும் துணிவும் கொண்டவர்களும் வெற்றி பெற முடியவில்லை. எனவே இந்திராகாந்தியின் முடிவு எங்குபோய் முடியுமோவென்று, அவ்வளவு திட்டவட்டமாகக் கணித்துச் சொல்ல முடியாது. ஒருவேளை, உலக வரலாற்றில், இட்லர், முசோலினி, போன்ற அனைத்ததிகாரப் பேராசைக்காரர்களுக்கு ஏற்பட்ட முடிவாகக்கூட இந்திராகாந்திக்கு ஏற்படலாம். அதற்குக் காலந்தான் விடைகூற முடியும். எனவே, இதை விடுத்து, இன்றுள்ள ஆந்திராவில் அடித்துக்கொண்டிருக்கும் அரசியல் புயலைப் பற்றிய சில செய்திகளின் கவனத்துக்கு வருவோம். அதனடிப்படையில் சில அரசியல் உண்மைகளை நாம் தெரிந்து, தெளிந்துகொள்ள வேண்டும் இல்லையா? ஏனெனில், அரசியலைப் பொறுத்த வரையில் வெறும் ‘ஆய் ஊய்’ என்னும் அரட்டல் மிரட்டல் ஓசைகள் உள்ள அரசியல் தலைவர்களிடம் ஒரு சரக்குமே இருக்காது என்பதையும், இந்திரா காந்திபோல், என்.டி. இராமராவ் போல் அமைதியாகவிருந்து, காலமுணர்ந்து செயலாற்றுபவர்களிடந்தான், ஏதோ, மக்களுக்குப் பயனளிக்காதனவும், பயனளிக்கத்தக்கனவுமான சில செய்திகள் இருக்கலாம் என்பதையும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் நமக்கு மிகுதியான ஆர்வமும் அன்பும் அக்கறையும் உண்டு. அதனடிப்படையில் இங்கு சில செய்திகளைப் பற்றிச் சிந்திப்போம்.

இக்கால், ஆந்திராவில் நடந்துள்ள, நடந்து வருகின்ற அரசியல் நாடகம் ஒன்றும் புதியதன்று. நம் நாடு விடுதலை பெற்ற பின்பு நடந்துள்ள அவலச் சுவை நிரம்பிய நாடகங்களுள் இதுவும் ஒன்று. எனவே, இதற்கெல்லாம் இந்திராகாந்தி போல் தொடர்ந்த அரசியல் நாடக ஆசிரியர்கள் அவ்வக் காலங்களுக்கேற்றபடி இருக்கவேதான் செய்வார்கள். மக்கள் முழு அறிவு பெறுகிற வரையில் அதை யாராலுமே தடுத்து நிறுத்திவிட முடியவே முடியாது

இன்று ஆந்திராவில் நடந்துள்ள இராம்லால்-பாசுக்கரா நாடகம் போல், நேருவின் காலத்திலேயே சில நாடகங்கள் பேராயக்கட்சியின் பெருமுதலைகளால் நடத்தப்பட்டே வந்துள்ளன. எனவே, இவ்வகையில் தந்தையார் சூழ்ச்சியையே மகளாரும் பின்பற்றுகிறார் என்றே சொல்லலாம். இதற்கெல்லாம் நம் இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் (Constitution of India) உள்ள ஓட்டைகளே காரணங்களாக இருக்கின்றன! எனவே, என். டி. இராமராவ் போலும் எத்தனை அரசியல் துறவிகள் (சந்நியாசிகள்) (!) வந்து எதிர்த்துப் போராடினாலும் பயனில்லை. என்ன குட்டிக்கரணம் அடித்தாலும் வெற்றிபெற வாய்ப்பில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்தையே உடைத்தெறியும் வல்லமையோ, அல்லது அதனைப் புறந்தள்ளிவிட்டு அதனின்று வெளியேறும் வலிமையோ உள்ள ஒருவரால்தான் அப்போராட்டத்தில் வெற்றி பெற முடியும்; அத்தகையவர்கள் இன்று தோன்றிவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை; தோன்றியிருந்தாலும் வெளிப்பட்டுவிட்டார்கள் என்று கூற முடியவில்லை; வெளிப்பட்டிருந்தாலும் மக்கள் விளங்கிக் கொண்டார்கள் என்று சொல்லவியலாது! ஏனெனில், இன்றைய நிலையில், மக்களைக் குழப்புவதற்காகவும், அல்லது அவர்களை அறியாமையிலேயே வைத்திருப்பதற்காகவும், அப்படி அவர்கள் குழம்பிய நிலையிலும், அறியாமையில் உள்ள நிலையிலும், அவர்களைச் சுரண்டிப் பிழைப்பதற்காகவுமேதான் அரசியல் தலைவர்கள் முன்னணியில் நிற்கின்றனர்! அது கிடக்கட்டும்!

இன்று, ஆந்திராவில் நடந்துள்ள அரசியல் இல்லுமல்லுகளுக்கு முன்னோடியாக உள்ள சில பழைய நாடகக் காட்சிகளை இன்று நினைவுகூர்வோம்!

1952-இல் தமிழ்நாட்டில் இராசாசி அமைச்சரவை ஏற்பட்டது நம் எல்லாருக்கும் தெரியும். ஆனால், அஃது, எந்த வகையாக ஏற்பட்டது என்பது நம்மில் பெரும்பாலோர்க்கு மறந்து போயிருக்கலாம். இதே இராம்லால்-பாசுக்கரா நாடக உத்திதான் அப்பொழுதும் கடைப்பிடிக்கப்பட்டது.

அவ் வாண்டு நடந்த பொதுத் தேர்தலில் 325 சட்ட மன்றத் தொகுதிகளில், பேராயக் கட்சி (காங்கிரசுக்கட்சி) வென்ற இடங்கள் 155. பெரும்பான்மை இல்லாமையால் அதனால் அமைச்சரவையை அமைக்க முடியவில்லை. இந்த நிலையில், அன்று சென்னை மாநிலச் சட்டமன்றத்தில் உறுப்பினராகவிருந்த ஆந்திர அரிமா (ஆந்திர கேசரி) டி. பிரகாசம் தமக்குச் சார்பாக, தனி உறுப்பினர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு 167 பேராகப் பெரும்பான்மை உள்ளதாக, அப்பொழுது சென்னை மாகாண ஆளுநராகவிருந்த சிரிபிரகாசாவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

என்ன நடந்தது? சட்டமன்றச் சிறுபான்மைக் கட்சியாகவிருந்த பேராயக் கட்சியையே ஆட்சிக்குக் கொண்டுவர நடுவணரசு விரும்பியது. அதை ஆளுநரிடம் தெரிவித்தது. ஆளுநர் என்ன செய்தார்? தேர்தலில் நிற்காத இராசாசியை மேலவை உறுப்பினராக ஆக்கி, முதலமைச்சராகச் செய்து, அமைச்சரவை அமைக்கும்படி செய்து விட்டார். இவ்வாறு செய்ததன் வழி, இராசாசி இந்தியத் தலைமை ஆளுநராக (கவர்னர் செனரலாக) இருந்த பொழுது, தம்மை ஆளுநராக அமர்த்திய நன்றிக்கடனையும் திருப்பிச் செலுத்தி விட்டார், சிரிபிரகாசா!) உடனே, பிரகாசம் காருடன் இருந்த உதிரி உறுப்பினர்கள் பணவலிவால் இழுக்கப்பட்டுச், சிறுபான்மையாக இருந்த பேராயக் கட்சியைப் பெரும்பான்மையாகச் செய்து ஆட்சியை அமைத்து விட்டார்கள்! இது நடந்தது நேர்மைக்கும் நடுநிலைமைக்கும் பெயர் போன நேரு பெருமகனார் காலத்தில்தான்! ஆனால், அன்றைக்கு மக்களுக்கு இந்தத் தந்திரச் சூழ்ச்சிகளெல்லாம் சரியாக விளங்கவில்லை. நேருவே செய்ததால் சரியாகத்தான் இருந்திருக்கும் என்ற ஒரு நம்பிக்கை மலைபோல மக்கள் மனத்தில் நிலைத்திருந்தது!

அதன்பின் 1965-இல் கேரளாவில் இன்னொரு வியப்பான நிகழ்ச்சி நடந்தது. அந்த ஆண்டு நடந்த இடைத் தேர்தலில், மொத்தமான 133 இடங்களில், பொதுவுடைமைக்கட்சியினர், 40 இடங்களில் வெற்றி பெற்றுப் பெரும்பான்மை இல்லையென்றாலும், தனிப்பெரும் கட்சியாக இருந்தனர். பேராயக் கட்சியினர் இருந்த இடமே தெரியாமல் மிகச்சிறிய அளவில் உறுப்பாண்மை பெற்றிருந்தனர். இருப்பினும் அன்றைய ஆளுநர், பேராயக்கட்சியிடமே முதன்மைப் பொறுப்பை ஒப்படைத்து, ஒரு கலப்பு அமைச்சரவையை அமைத்திருந்தார்.

மீண்டும் 1967-இல் மேற்கு வங்காளத்திலும் இராசத்தானிலும் பீகாரிலும் மூன்று புதுமையான நாடகங்கள் நடத்தப் பெற்றன.

அப்பொழுது மேற்கு வங்காளத்தில் அசாய் முகர்சி தலைமையில் ஒன்றிய முன்னணி அமைச்சரவை அமைத்து ஆட்சி செய்து கொண்டிருந்தது. நேற்று, ஆந்திராவில் இராமராவ் தலைமையில் தெலுங்கு தேசக்கட்சி ஆட்சியிலிருந்ததைப் போல!

ஆனால் அன்றும் இப்படித்தான் அங்கொரு ‘பாசுக்கர ராவ்’ இருந்தார். அவர் பி. சி. கோசு. அவரையும் அவரைச் சேர்ந்த சிலரையும், அக்கால் மிகச் சிறுபான்மையாகவிருந்த பேராயக்கட்சி (காங்கிரசுக் கட்சி) மிகுந்த பணங்கொடுத்து விலைக்கு வாங்கியது. நிலைமை வாய்ப்பாக அமைந்தவுடன், நடுவண் அரசு அங்கிருந்த ஆளுநரை, உடனே சட்டமன்றத்தைக் கூட்டி, மீண்டும் அமைச்சரவையைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கட்டளையிட்டது.

ஆட்சியிலிருந்த முன்னணி அரசோ, உடனே அமைச்சரவையைக் கூட்டாமல் 20 நாள்கள் தள்ளிப் போட்டது. ஆனால், ஆளுநரோ, நிலைமை மாறிவிட்டால் என்ன செய்வது என்று கருதி, தமக்குள்ள அதிகாரத்தால் உடனே சட்டமன்றத்தைக் கூட்டி, முடிவு செய்ய விரும்பினார். இதை அன்றிருந்த முன்னணி, இப்பொழுது இராமராவ் எதிர்த்துப் போராடுவதைப போல் போராடியது. செய்தி மீமிசை அறமன்றம் (சுப்ரீம் கோர்ட்) வரையிலும் கூடப் போனது. ஆனால், முடியவில்லை. எனவே ஆளுநர் குறிப்பிட்ட இரண்டு நாள்கள் தள்ளிச் சட்டமன்றத்தைக் கூட்டி அசாய் முகர்சி தலைமையில் இருந்த முன்னணி அரசை, பதவிநீக்கம் செய்து கலைத்து விட்டுப், பேராயக்கட்சிக்கு மாறிய பி.சி.கோசு தலைமையில் அமைச்சரவையை அமைக்க வழிசெய்து விட்டார்!

இராசத்தானிலும் அதே ஆண்டு அதே நாடகந்தான் நடந்தது. சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் மொத்தம் 183. அவர்களில் 85 பேர் அன்றிருந்த சுதந்திராக் கட்சித்தலைமையில் ஒன்று சேர்ந்து ஒரு முன்னணி அமைத்து, அன்றைய ஆளுநர் சம்பூர்ணாநந்து அவர்களிடம் அமைச்சரவை அமைக்கக் கோரினர். ஆனால், ஆளுநர், நடுவணரசு ஏற்பாட்டின்படி, உதிரி உறுப்பினர்களை விலைக்கு வாங்கிச் சிறுபான்மையாக இருந்த பேராயக்கட்சியைப் பெரும்பான்மையாக்கி அதையே அமைச்சரவை அமைக்கச் செய்தார்!

அந்த ஆண்டு பீகாரிலும் அதே கதைதான்! அன்றிருந்த பேராயக்கட்சி அமைச்சரவையின் இடைக்காலத்தில், ஓர் அரசியல் இக்கட்டு ஏற்பட்டது. பி. பி. மண்டல் அந்த அமைச்சரவையில் ஓர் அமைச்சர். அவர் தேர்தலில் நிற்கவுமில்லை; சட்டமன்ற உறுப்பினரும் இல்லை. ஆனால் முதலமைச்சரின் கடைக்கண் பார்வையால் அமைச்சராகவிருந்தார். (இப்படி இருப்பதற்கு நம் ஓட்டைக் கப்பலான இந்திய அமைப்புச் சட்டத்தில் ஏராளமான குறுக்கு வழிகள் உள்ளன என்பது பலருக்குத் தெரியாது. இது பற்றி ஒரு தனி நூலே எழுத வேண்டிய அளவு தேவை உள்ளது! ஆனால், எத்தனை வேலைகளைத்தாம் நாம் மேலே எடுத்துப் போட்டுக் கொள்ள முடியும்? வாய்ப்பிருந்தால் பார்ப்போம்!) அவ்வாறு அமைச்சராகவிருந்த நம் பி. பி. மண்டல் ஏதோ ஒரு காரணத்தால் முதலமைச்சருடன் பிணக்குக் கொண்டு, அமைச்சரவையை விட்டே வெளியேறினார். நம்!) பாசுக்கராவைப் போல, சில தந்நலக்காரர்களையும் (அவர்களும் பேராயக் கட்சியினர்தாம்) இழுத்துக் கொண்டு வெளியேறினார். இந்த நிலையில் அவருக்குப் பெரும்பான்மை கிடைத்து விட்டது! ஆனால், பேராயக் கட்சிக்கு எதிரி! இருப்பினும் தம் பெரும்பான்மையைச் சுட்டிக்காட்டி, அப்போது அங்கு ஆளுநராய் (கவர்னராய்) இருந்த திருவாளர் அனந்தசயனம் (ஐயங்கார்) அமைச்சரவை அமைக்கத் தம்மை அழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் நடந்தது என்ன? சிறுபான்மையாக இருந்தாலும், நடுவணரசின் செல்லப் பிள்ளையாக இருக்கும் பேராயக்கட்சிதான், அமைச்சரவை அமைத்தது.

எனவே, ஆந்திரா கதையொன்றும், புதியதான, திடீர் வியப்பூட்டக் கூடிய, ஒரு ‘திகில்’ கதை அன்று. ஆந்திராவுக்கு முன்னரே அசாமும், காசுமீரும் உடைபட்டப்படவில்லையா? இப்படிப் பல கதைகள் இந்திய அரசியல் வரலாற்றில் உண்டு. (இந்த இடத்தில், நம் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவி (இரெட்டி) அவர்கள் இராமராவ் அவர்கள் தம்மைப் பார்க்க வந்திருந்த பொழுது அவருக்குக் கூறிய ‘அரிய’ அறிவுரைதான் நினைவுக்கு வருகிறது. ‘அரசியல் என்பது “படு பயங்கரமான” (அவருடைய சொல்) ஒரு விளையாட்டு! அந்த விளையாட்டில் ஈடுபடும் ஒருவர் மிக உயரத்துக்கும் போகலாம்; அடிபாதாளத்திலும் விழலாம்! எனவே பார்த்து நடந்து கொள்ளுங்கள்’ என்பது அவர் பட்டறிவுரை! (இந்த) விளையாட்டில் இந்திரா காந்தி போல் மிகவும் கெட்டிக்காரரே மிகுதியான தங்கப் பதக்கங்களைக் குவிக்க முடியும்!

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

---

### கல்வி நிலையங்கள் சாதிப்பெயரால் இயங்குவதைத் தடை செய்யுங்கள்!

சாதி, மதத்தின் பெயரால் கல்வி நிலையங்களின் பெயர்கள் இருந்து வருகின்றன. இது மாணவர்களின் உள்ளத்தில் சாதி, மத உணர்வுகள் வளர வாய்ப்பு அளிக்கிறது. எனவே கல்வி நிலையங்களின் பெயர்கள் சாதி மதங்களின் பெயர்களில் இருப்பதைத் தடைசெய்யும் வகையில் அரசு ஆணையிட வேண்டும்.

— தமிழக ஆசிரியர் கூட்டணிச் சார்பில் கடந்த 30-8-84 அன்று கோவையில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் நிறைவேறிய தீர்மானத்தின் ஒரு பகுதி.

# கொற்கைத் தமிழ் மன்றம் வள்ளுவர் சிலை திறப்பு விழாச் சிறப்புகள்

ஏரல் சிறுத்தொண்ட நல்லூரில் உலக முதற் புலவர் திருவள்ளுவருக்கு 11-8-84 காரிக்கிழமை சிலை சமைத்துப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த அரிய முயற்சியைக் 'கொற்கைத் தமிழ் மன்றம்'' மேற்கொண்டு பெருஞ் சிறப்பொடு நிறைவேற்றி வைத்தது.

பதினையாயிரம் மக்களைக் கொண்ட ஏரல் கடைத் தெருவில் ''திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா'' களை கட்டி எங்கும் இதே பேச்சாக இருந்தது.

கொற்கைத் தமிழ் மன்றம் செய்து வரும் இலக்கியப் பணிகளில் கலந்து கொண்ட முதுபெரும் புலவர் அ. நடேசனார் ஓராண்டிற்கு முன், திருவள்ளுவருக்கு நிலையான ஒரு சிலை அமைக்கும் படி ஒடி மன்றத்தைக் கேட்டுக் கொண்டார். மன்றமும் ஓராண்டாகத் தன் இடையீடில்லாப் பெரு முயற்சியால் பெருந்தொகை, நல்லுள்ளமுடையோரிடம் ஈட்டித் தன் கடமையை நிறைவு செய்ததில் பெரு மகிழ்வடைவது இயல்புதானே.

இதற்குப் பல நல்லோர் ஆயிரம், ஐநூறு உருபாக்களாக ஏறத்தாழநாற்பதுபேர் தந்துஉதவினார்கள். வள்ளுவர் சிலையை உருவாக்கிய சிற்பி நாகர் கோயில் அருகில் உள்ள மயிலாடி எனும் ஊரில் பிறந்த திரு. கு. நல்லதாணு, வந்திருந்த அனைவரும் பாராட்டி மகிழும் படி உருவாக்கியிருந்தார். கீழுள்ள பீடக்கல் ஆறு கல்லெடை (டன்) அளவில் ஆக்கப் பெற்றுப் பார்ப்போர் உள்ளத்தைப் பெரிதும் கவர்வதாய் இருந்தது.

11-8-84 காலையிலே கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, முதலிய மாவட்டங்களிலிருந்து தமிழ்ச் சான்றோர் பலர், பேருந்திலும், மகிழ் உந்திலும் வந்த வண்ணமிருந்தனர். அவ்வன்பர்கட்கு மன்றம், நல்லுணவளித்துப் பெரிதும் மகிழ்ந்தது. சிறிய ஊராயிருப்பினும் அவ்வூர் மக்கள் தங்கள் சொந்த விழாவாகக் கருதி அறுபதிற்கும் மேலான ''வண்ண வளைவுகள்'' ஊர்வலம் வரும் வழி நெடுக அமைக்கப்பட்டு, அழகு செய்திருந்த காட்சியும், வாழைகள் பதாகைகள் கட்டி எழில் ஊட்டியிருந்த மாட்சியும் கண்டோர் தமிழர்க்கோர் எழுச்சி வரும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாய் இருந்தன.

விழாச் சிறப்புக்கு உதவிய அன்பர்களுக்கெனவும், பேச்சாளர்கள், தலைவர்களுக்கெனவும், தனித்தனியே ஆன வண்ணமார்பொட்டிகளை அன்பர்கள் விழா நாள்களில் அணிந்து நகர்வலம் வந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பாவலரேறு ஐயா அவர்களும், அவருடைய துணைவியார் தாமரை அம்மையாரும், தமிழூர் அருளி வருவதற்கு முன் இருநாள்களாக இங்கு வந்து, குரும்பூர் முதலிய பல ஊர்கட்குச் சென்று சொற்பொழிவாற்றித் தமிழ்க்குப் பெருமை சேர்த்தார்கள். ஐயா அவர்கட்கு அணுக்கத் தொண்டராக சோமசுந்தரம் என்ற இளைஞர் இறுதிநாள் வரை இருந்து உற்றுழி உதவினார். அன்று மாலை மூன்று மணி அளவிற்குத்தலைமை ஏற்கப் பண்டாரகர் க.ப. அறவாணன் அவர்களும், பேராசிரியர்களான ஆழ்வார், மா. பா. குருசாமி முதலிய சான்றோர்களும் வந்து தம் கடமை ஆற்ற அணியமாயினர்.

**ஊர்வலம் :—**

திருவள்ளுவர் சிலைதிறப்பு விழாவிற்கு, அமைந்திருந்த ஊர்வலம் மிகப் பெருஞ் சிறப்போடு பீடு நடை போட்டது. அழகு மிக்க கண்ணாடியாய் ஒப்பனை செய்யப்பட்ட இனிய தேரில் தமிழ்த்தாய் கொலுவீற்றிருக்கும் காட்சியும், சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி குண்டலகேசி ஆகியவை அவர் அருகே வீற்றிருக்கவும் ஆனகாட்சியும் பார்ப்பவர் உள்ளங்களில் பழந்தமிழ் உணர்வை ஊட்டியது.

சோழ சேர பாண்டியர், 'முரசு முழங்கு தானை மூவரும் கூடி அரசவை இருந்த தோற்றம் போல', புலி, வில், கயல் பொறித்த வண்ணக் கொடிகளைக் கையில் ஏந்தி யானை மீது அமர்ந்து வந்த மாட்சி, எந் தமிழர் இனத்தை இனி எதிர்ப்பவர் எவரும் இலர் என்று எண்ணிப் பூரிக்கும்படி இருந்தது. தெருவின் இரு மருங்கும் நின்று காணும் மக்கள், விழாவெடுக்கும் கொற்கை மன்றம் வாழ்க என்று வாழ்த்தினர்.

ஊர்வலத்தில் வந்த நான்கு சரக்குந்து (லாரி) ஒன்றில் கனக விசயர் தலையிலே கல்லேற்றி வடநாடு வென்று வாகை சூடி வரும் செங்குட்டுவன் வாள் பிடித்துத் தன் பெருமிதம் தோன்ற நின்ற காட்சியைக் கண்டோர் அனைவரும் இஃது என்ன - என்ன என்றுக் கேட்டு வரலாறு தெரிந்து வியந்தனர். வடவரை வணக்கிய மாமன்னன் வாழ்க என்று மாணவர் பலர் வாழ்த்துரை முழங்கினர்.

மற்றொரு சரக்குந்தில், வள்ளுவப் பெருந்தகை தம்மொத்த புலவர்களோடு ஒருங்கிருந்து, திருக்குறளைத் திக்கனைத்தும் பரப்புவது போன்ற விளக்கமான காட்சி இடம் பெற்றிருந்ததைப் பலரும் கண்டு போற்றினர்.

இன்னொன்றில், நமது வேளாண் தொழிலாளர், கலப்பை, மண்வெட்டி, அரிவாள், பரதவர் வலைகள், குறிஞ்சி நிலப்பண்டைய மாந்தர்போன்ற காட்சிகள் அமைந்து மிகவும் சிறப்பை ஊட்டின.

சிலம்பாட்டத்தில் சிறந்து விளங்கும் சிறுவர்களும் பெரியவர்களும் அடங்கிய குழுவினர் வழி நெடுக நின்று நின்று விளையாடி வந்தது பல்லோரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியது இவர்கள் சிறுத்தொண்டநல்லூர் மகேந்திர சிலம்பாட்டக் குழுவினர்.

கூட்டாம்புளி என்ற ஊரைச் சேர்ந்த மற்றொரு சிலம்பாட்டக் குழுவினர், மல்போர், சிலம்பாட்டம், தாரை விளையாட்டு தீப்பந்தம் முதலிய ஆட்டங்களைக் காட்டி மக்களுக்கு எழுச்சி யூட்டினர்.

அடுத்து, ஏரல் தெரசா நடுநிலைப் பள்ளி, ஏரல் மகளிர் அரசு உயர்நிலைப் பள்ளி, சிறுத்தொண்ட நல்லூர் அரசு மேனிலைப் பள்ளி, இவ்வூர் தொடக்கப் பள்ளிகள். ஏரல் நடுநிலைப் பள்ளி முதலிய மாணவர்கள் ஈராயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து ஊர்வலத்தைக் கலகலக்க வைத்தனர்.

அறத்துப்பால் 38 அதிகாரங்கள், பொருட்பால் 70 அதிகாரங்கள், இன்பத்துப்பால் 25 அதிகாரங்கள் என்று எழுதிப் பிடித்த அட்டைகளுடன் மாணவர்கள் சீருடை அணிந்து வந்தது பயனும் பெருமையும் உடையதாயிருந்தது.

மற்று ஒவ்வொரு பள்ளியும் தத்தம் பள்ளியின் பெயர் தாங்கிய அட்டைகளைப் பிடித்துக் கொண்டு சீருடையோடு வந்தனர். தமிழ் வாழ்க! தமிழ் இனம் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! என்ற அவர்கள் முழக்கம் எம்மனோர்க்கு எழுச்சி யூட்டியது.

இடை இடையே வானவேடிக்கைகளும் சிறப்பை அளித்தன. ஊர்வலத்தின் நடுவில், பாவலரேறு ஐயா அவர்கள், தாமரை அம்மையார், அருளி, அவர் துணைவியார், ஏரல் சேர்மன் கோயில் வழிமுறை அறங்காவலர், அருணசலனார், பேராசிரியர்கள். புலவர்கள், தாய்மார்கள், பொதுமக்கள், முதலிய பெருமக்கள்பலர் ஏறத்தாழ மூன்று கல் நீளம் முழுமையும் கால்நடையாகவே வந்த எழில் மிக்க காட்சியால் தமிழினம் வாழ விடிவு தென்படுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

இந்த ஊர்வலம் 3 மணி நேரம் நடந்துவந்து ஏரல் சிறுத்தொண்டநல்லூர் வள்ளுவர் கோட்டத்தை அடைந்ததும், எங்கும் தமிழ் வாழ்க! வள்ளுவர் புகழ் ஓங்குக! என்ற பெருமுழக்கம் வானளாவ ஒலித்தது

ஏரல் பள்ளி மாணவியர் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடலை பக்கக் கருவியோடு இசைத்து அவையோர்க்கு இன்பமூட்டிக் கூட்டத்தைத் தொடங்கினர்.

இத்தகைய பெரும் ஊர்வலத்தை நடத்திக் காட்டியது இதுவே முதல் தடவை எனவும் இப் பெருமை கொற்கைத் தமிழ் மன்றத்தையே சாரும் எனவும் பேசிச் சென்றனர் மக்கள். இன்னும், இவ்வூர்வலத்திற்கு 30 படி அரிசியில் கன்னல் அமுது ஆக்கி வந்திருந்த மாணவர் அனைவர்க்கும் வழங்கப் பட்டது இதற்கு மட்டிலும் மணி என்ற முத்துமாலை, சொந்தப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டார்.

இலங்கை விடுதலைப்புலி திரு. முகுந்தன் ஊர்வலத்தில் கலந்து படைநடத்திச் சென்று முழக்கமிட்ட பாங்கு, இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்னும்படி இலங்கைக்கே போர்க்கொடி ஏந்திச் செல்வது போல் இருந்தது.

முடிவாக, இவ் வள்ளுவர் சிலை திறப்புவிழாவிற்கு முடி சூடியது போன்று அமைந்த ஊர்வலம் பற்றி மகிழ்ந்து போற்றிப் பாராட்டாத மக்களே இல்லை என்னுமாறு மிகவும் சிறந்து விளங்கியது.

ஆக்கம் : ச. புலவர் சிவசங்கு
தலைவர். கொ. த. ம, ஏரல்.


பொன்போன்றது திருக்குறள்!
வயிரம் போன்றவர் திருவள்ளுவர்!
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்

**சு.நல்லதம்பி மகார்**

22 மாற்றுப் பொன், வெள்ளி
நகைகள் வாணிகம்!
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்
பெயர் பெற்றது!
12. கடைத்தெரு. ஏரல்
உரிமை
சு.ந. சண்முக சுந்தரம்


தமிழன் அழிகிறான் அங்கே!
தமிழ் அழிகிறது இங்கே!

# 'விடுதலை' இதழுக்கு என்ன அதில் இவ்வளவு மகிழ்ச்சி!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பட்ட வகுப்புகளுக்கு மாணவர்கள் படிக்க முன்வரவில்லை என்றொரு செய்தி வந்தது. 'தினமணி' உட்பட,பல பார்ப்பனச் செய்தித் தாள்களில் கூட இச் செய்தி இயல்பான முறையிலேயே வெளியிடப் பெற்றது.

ஆனால், தமிழின முன்னேற்றத்திற்காகவே உழைப்பதாகச் சொல்லிக் கொள்ளும், நம் திராவிடர் கழக நாளேடான 'விடுதலை' இதழில் இச் செய்தி கீழ்வருமாறு, மகிழ்ச்சி உணர்வு கலந்து வெளியிடப் பெற்றுள்ளது கண்டு நாம் மிகவும் வருந்துகிறோம். செய்தி பொதுவானதாக இருப்பினும் அதை வெளிப்படுத்துவதில் உள்ள உணர்ச்சி கவனிக்கத் தக்கது. 'தமிழ்' வீழ்ச்சி அடைவதில் நம் கழகத் தோழர்களுக்கு இத்துணை மகிழ்ச்சியா? தமிழ் இல்லாமல் தமிழினம் எப்படி இருக்க முடியும்? எவ்வாறு அது முன்னேற முடியும்? தமிழனின் தாய் மொழியாகிய தமிழ்மேல் 'விடுதலை'க்கு இவ்வளவு எரிச்சலா? செய்தியைப் படியுங்கள். (செய்தி. 'விடுதலை' சென்னை 10-9-84 - பக்கம் 3) (செய்தியை - எழுத்தையும் கூட - மாற்றாமல் அதே கலப்புத் தமிழில் தருகிறோம்.)

## தமிழ் 'மவுசு' படுவீழ்ச்சி

சிதம்பரம், செப்.9 - அண்ணாமலைபல் கலைக் கழக செனட் மண்டபத்தில், துணைவேந்தர் எஸ்.வி. சிட்டிபாபு தலைமையில் அகாடமிக் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தமிழ்த்துறை தலைவர் ஆறு. அழகப்பன் பேசுகையில் தமிழ் எம். ஏ. வகுப்பில் ஒரே ஒரு மாணவர் சேர்ந்துள்ளதாகவும், எம் ஓ எல். படிப்புக்கு மாணவர்கள் வரவில்லை என்றும் குறைபட்டுக் கொண்டார். அதனால் மாணவர் சேர்க்கைக்கு குறைந்த பட்ச மார்க்குகள் 45 சதவீதம் என்பதை 40 சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பேராசிரியர் கணபதிராமன் பேசுகையில் தமிழ் எம்.ஏ. எம்.ஓ.எல். படிப்பில் படிக்கும் மாணவர்களுக்கு உபகார சம்பளம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

- 84-85 கல்வி ஆண்டு முதல் விவசாய கல்லூரியில் செமஸ்டர் முறை தேர்வை மறுபடியும் கொண்டுவர கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

—செய்தி இதுதான். ஆனால், இதுபற்றிய சில விளக்கங்களை அன்பர்களுக்குத் தர விரும்புகிறோம்.

### இச்செய்தியில் உள்ள மொழிப் பிழைகள் :

1. 'அண்ணாமலை பல்கலைக் கழக' - என்பது 'அண்ணாமலைப் பல்கலைக் கழக' - என்றும்
2. 'தமிழ்த் துறை தலைவர்' - என்பது, 'தமிழ்த் துறைத் தலைவர்' - என்றும்
3. 'சேர்க்கைக்கு குறைந்த' - என்பது 'சேர்க்கைக்குக் குறைந்த' என்றும்,
4. 'சதவீதமாக குறைக்க' - என்பது 'சதவீதமாகக் குறைக்க' என்றும்,
5. 'விவசாய கல்லூரியில்' - என்பது 'விவசாயக் கல்லூரில்' என்றும்,
6. 'செமஸ்டர்முறை தேர்வை' - என்பது,'செமஸ்டர் முறைத் தேர்வை' என்றும், ஒற்று மிகுத்து எழுத வேண்டும். ஆனால் இதைப் பற்றி 'விடுதலை' என்றுமே கவலைப்பட்டதில்லை.

### இனி, பிற தவறான தமிழ் வழக்குகளையும் பாருங்கள்

இச்செய்தியில் உள்ள 'செனட்' 'அகாடமிக் கவுன்சில்' 'மார்க்குகள்' 'செமஸ்டர்' என்ற ஆங்கிலச் சொற்களுக்கு, 'ஆட்சிக்குழு', 'கல்விக்குழு', 'மதிப்பெண்கள்' 'பருவமுறைத்தேர்வு' என்ற சொல்வழக்குகளைப் பயன்படுத்தலாம். இவையெல்லாம் புதிய சொற்களல்ல. ஏற்கனவே வழக்கிற்கு வந்து, சில பார்ப்பன இதழ்களும்கூட பயன்படுத்திவரும் சொற்களே! அதுவுமன்றி, எம்.ஏ. என்பதை 'முதுகலை' என்றும், எம்.ஓ.எல். என்பதை, 'கீழ்த்திசை மொழி முதுநிலை' என்றும்கூட முன்பிருந்தே, தமிழ்வளர்க்கும் நோக்கங்கொண்ட இதழ்கள் சிலவும், அரசு வெளியீடுகள் சிலவும் பயன்படுத்தி வருகின்றன.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

# கொற்கைத்தமிழ் மன்றம் நடத்திய வள்ளுவர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி!

11-8-84 காரிக் கிழமை, ஏரல் சிறுத்தொண்ட நல்லூரில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்ற நிரல் முறையாவது :-

மேற்படி ஊர் வள்ளுவர் கோட்டம் எனும் இடத்தில் எழில்மிகு பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. தாமரைப் பூவால் அழகு மிக்குக் காணப்பெற்றது.

திருக்குறள், கடவுள் வாழ்த்துப் பாடலை இசையோடு ஏரல் அரசு உயர்நிலைப் பள்ளி மாணவிகள் பாட, விழா தொடங்கியது.

பண்டாரகர். க. ப. அறவாணன் அவர்களைத் தலைமை ஏற்று நடத்தித் தருமாறு கொற்கைத் தமிழ் மன்றத் தலைவர் முன்மொழிய, மன்றச் செயலாளர் வழிமொழிய அறவாணன் அவர்கள் தலைமை ஏற்றதும், மன்றச் செயலர் க ஐயாத்துரை, தலைவர், பாவலரேறு ஐயா அவர்கள், அருளியார், தாமரைஅம்மையார் விழாவில் கலந்து கொண்ட மற்ற அனைவரையும் அன்பு கனிய வரவேற்றுச் சிலை அமைக்க மன்றம் எடுத்துக் கொண்ட முயற்சியையும் எடுத்துக் கூறி அமர்ந்தார்.

தலைவர் அவர்கள் முன்னுரைக்குப் பின் பாவலரேறு ஐயா அவர்கள், தமக்குரிய இயல்பான பணிவோடு சென்று, உள்ளன்பு கனிய, திருவள்ளுவர் பெருமான் திருவுருவச் சிலையைத் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்கள்! மக்கள் ஒரே ஆரவாரமாகக் கையொலி எழுப்பி 'திருவள்ளுவர் வாழ்க' என வானளாவ வாழ்த்துக் கூறினர். அணுக்குண்டுபோன்ற பெரு வெடி ஒலி எழுப்பித் தம் வணக்கத்தை மன்றமும் மக்களும் தெரிவித்துக் கொண்டனர்.

திருமிகு ஞான தோமா உதவிச்செயற் பொறியாளர், வள்ளுவர் சிலை அமைப்பும், கொற்கையின் விரிவும் பற்றிப் பேசி வாழ்த்துரையும் வழங்கினார். புலவர் தமிழ் மாறன் அவர்கள், இச் சிலை நிறுத்தம் தமிழர்கட்கு எழுச்சியூட்டும் என்று கூறி வாழ்த்திப் பேசினார்.

சாத்தான் குளம் முத்தமிழ்க் கலை மன்றத் தலைவர். பெ. மு சுப்பிரமணியம், பாட்டால் வாழ்த்துரை வழங்கினார் உ.த.மு.க துணைப் பொதுச் செயலர் தென்னவன்கோ, மக்களுக்குத் திருக்குறள்வழிகாட்ட இஃது ஒருவாயிலாகும் என்று கூறி வாழ்த்திப் பேசினார். புலவர் செந்தில் நாயகம், தமிழ்த் தாயின் தலைமகனுருக்குச் சிலை எடுப்பது நமக்குப் பயன் தரும் என்று வாழ்த்திப் பேசினார்.

நெல்லைமாவட்டத் தமிழாசிரியர் கழகச் செயலாளர் ஆ. பழனி ஆண்டி இசைப் பாவால் இன்புறுத்தி வாழ்த்துரை வழங்கினார். செல்வி. சண்முக சுந்தரி சிறப்பாகக் கேட்போர் உளம் மகிழ வள்ளுவனார் குறள் மக்களுக்கு இன்றியமையாமை பற்றிப் பேசினார். திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரனார், வள்ளுவர் அளித்த வழிவு எனும் பொருளில் சீருரை ஆற்றினார்கள். சொல்லாய்வறிஞர் தமிழூர் அருளியார், ஊர்கள் தோறும் வள்ளுவர் சிலை அமைத்துப் பாராட்டுவதோடு, குறளைப் படிக்க வாயிலக்கிக் கொள்ள வேண்டும் என்றார். இறுதியாக 10 30 மணிக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் திருவள்ளுவர் சிலை திறப்பதால் ஆகும் மக்கள் மனநிலையும் இதனால் என்ன பயன் என்பது பற்றியும், திருக்குறள் வாழ்வின் சட்ட அமைப்பாகும் என்றும் விரிவாக இரண்டு மணி நேரம் மக்களின் மனம் எழுச்சி கொள்ளுமாறு உணர்வுரை ஆற்றினார்.

பின் தெரசா நடுநிலைப் பள்ளி மாணவர்கள் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றம் செய்வது போலப் புலவர் சிவசங்கு எழுதிய ஒரு கற்பனை நடகத்தை நாடகமாக நடத்திக் காட்டி மக்களின் பாராட்டைப் பெற்றனர் ஏரல் பள்ளி மாணவர் வள்ளுவர் வாய்மை என்னும் ஓரங்க நாடகம் நடத்தினர். இறுதியாக, அதியமான எழுதிய ஔவையார் என்னும் வில்லிசை நிகழ்ச்சியைச் செந்தமிழ் வில்லிசைக் குழுவினரொடு செல்வத் தாயம்மாள் பாடி மகிழ்வித்தார். திருவள்ளுவர் சிலை திறப்புவிழா இரவு 2 மணியளவில் நிறைவெய்தியது.

ஆக்கம் : — புலவர். ச. சிவசங்கு, தலைவர். கொ. த. மன்றம், ஏரல்.



தமிழகத் தலைமகனார் திருவுருவச் சிலையைப் பாவலரேறு திறந்து வைக்கிறார்



திருவள்ளுவரின் திருவுருவச் சிலைக்கு பாவலரேறு மாலையணிவிக்கிறார்



தலைமையேற்ற பர். க. ப. அறவாணன் உரையாற்றுகிறார்



பாவலரேறு அவர்களுக்கு மன்றத்தலைவர் மாலை அணிவிக்கிறார்



சிறப்புப்பொழிவாளர் பாவலரேறு உரையாற்றுகிறார்



பாவலரேறு ஐயா, முகுந்தன், அருளியார், சிவசங்கு, ஆகியோர் ஊர்வலத்தைப் பார்வையிடுகின்றனர்



ஊர்வலத்தில் பழந்தமிழர் வீரவிளையாட்டுகள்

# கொற்கைத் தமிழ் மன்றம் தமிழின உணர்வூட்டக் கருத்தரங்கு

கொற்கைத் தமிழ் மன்றத்தின் ஏழாம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தின் முற்பகுதியாகத் தமிழின உணர்வூட்டக் கருத்தரங்கு ஏரல் அருள்மிகு சேர்மன் சாமி திருக்கோயில் கலையரங்கில் 12-8-84 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தலைமையுரை :

கருத்தரங்கிற்கு, திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திரு. கி. ஆழ்வார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். முன்னுரையின் போதும் முடிவுரையிலும் பேச்சாளர்களை அறிமுகப் படுத்தும்போதும் பேச்சின் இறுதியில் தொடர்புரை கூறும்போதும் தலைவரின் பேச்சு தலைமை உரைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றும் தலைவரின் தமிழ்ப் பேச்சு மிக அருமையாக ஆங்கிலக் கலப்பின்றி இருந்தது. தலைவர் தம் பேச்சில், 'இவ்வாறு ஓர் இனத்துக்கு அவ் வினத்தைப் பற்றிய உணர்வு ஊட்டவேண்டிய கடப்பாடு உடைய கருத்தரங்கு வேறு எந்நாட்டிலாவது அமையுமா? என்று எண்ணிப் பார்க்கவே வருத்தமாக உள்ளது. அந்த அளவு தமிழன் இன உணர்வும் மொழி உணர்வும் இன்றி இழிந்த நிலையில் இருக்கின்றான். அவனுக்கு இனவுணர்வு ஊட்டி அவனை முன்னேற்றவேண்டியது கற்றறிந்த நமது கடமையாக இருக்கிறது. இங்கே நாம் கூடிச் செய்யும் முயற்சிகள் பயன்தர வேண்டும்' என்று வலியுறுத்தினார். மேலும் இனம், இனவுணர்வு எனும் சொற்களுக்கு மேனாட்டு ஆசிரியர்கள் கூறுகின்ற விளக்கத்தை நம் இனத்தோடு ஒப்பிட்டுக் காட்டிய பாங்கு சிறப்பு உடையதாக இருந்தது. 'நான் ஆசிரியர் என்ற முறையில் பாடப்பொத்தகத்தி லுள்ள செய்திகளை வகுப்பறைகளில் மாணவர்களுக்குக் கற்பிக்கிறேன். அஃது என்னுடைய கடமை. அதற்கே ஊதியமும் பெறுகிறேன். ஆனால் பாடப் பொத்தகத்திலுள்ள அதே செய்தியைப் பொது மேடையில் கூறினால் நான் தவறான கண்ணோட்டத்தோடு பார்க்கப்படுகிறேன்' என்று ஓர் எடுத்துக் காட்டு கூறினார்.

'நம் இன வீழ்ச்சிக்குக் காரணம் நாமே. நம்முடைய ஒற்றுமை இன்மையே காரணியம். மாலிக் காபூர் படை எடுப்பால் தமிழகம் வீழ்ந்தது; அந்த மாலிக்காபூரைத் தமிழகத்திற்கு எதிர்கொண்டு அழைத்தவன் ஒரு தமிழன். அந்நாள்போல நாம் இன்றும் பிளவு பட்டுக்கிடக்காமல் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுக்காமல் ஒன்றுபட்டு உழைத்து, நமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் தமிழ், தமிழர், தமிழ்நாடு ஆகிய வற்றின் நலத்தையே மனத்தில் எண்ணி ஒன்றுபட்டு உழைத்து உயர்ந்து நாட்டை முன்னேற்ற வேண்டும்' என்று உணர்வு ஊட்டினார்.

தமிழன்பர்கள் பலர் உணர்வூட்டினர் :

திரு. இனநலவேந்தன் சொற்பொழிவில் 'தமிழ், தமிழர் முன்னேற்றத்திற்கு நாம் எந்தவகையான ஈகத்திற்கும் அணியமாக இருக்க வேண்டும்' என்று கூறினார்.

வடநெல்லை மாவட்ட உ.த.மு.க. செயலர் திரு தமிழன்பன் உரையிடையே, 'தமிழின உயர்வு, மீட்சி ஒன்றையே நமது உயிர் மூச்சாகக் கொள்ளவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

அச்சக வளர்ச்சிக்கு :

உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னன்கோ பாவலரேறு ஐயா அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக இதழ்களின் வாயிலாகச் செய்து வரும் தமிழ்ப்பணியை எடுத்துரைத்தார். ஐயா அவர்களின் இதழ்களை 25 ஆண்டுகள் படித்தும் இந்தத் தாழ்ந்துபோன தமிழ்மக்கள் இன உணர்வு கொள்ளவில்லையே என்று வருந்தினார். தென்மொழி தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம், ஆகியவை இல்லந்தோறும் தவழும் நாள் வரவேண்டும் என்று விழைந்தார். ஐயாவின் தமிழ் இதழ்ப் பணிக்கு உறுதுணையாக இருக்கவேண்டியது தமிழர் கடமை என்று உணர்த்திக்காட்டினர். அதை வலியுறுத்தும் போது, 'பிறரைப் போல ஐயா அவர்களுக்கு ஏமாற்று வழிகள் தெரியா; சலுகை விலையிலன்றிக் கடைகளில் மிகுவிலையில் கிடைக்கும் தாள்கள் வாங்கி அச்சிடுவதாலேயே இயக்க இதழ்கள் வெளிவருவதில் காலத்தாழ்த்தம் ஏற்படுகிறது. நல்ல அச்சகம் ஒன்றும் நமக்கு வேண்டும்; எனவே நம் இயக்க இதழ்களுக்கு என்று வாய்ப்பான அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டால் இதழ்கள் இடையறாமல் காலந் தாழ்த்தாமல் நம் கையில் கிடைக்கும். அதற்கென பொருள் வழங்கவேண்டியது தமிழர் கடமை. அதை வலியுறுத்தும் வகையில் விரைவில் நெல்லை மாவட்டத்தின் சார்பில் கணிசமான பொருட்கொடை ஐயா அவர்களுக்கு அளிக்கப்படும். விரைவில் மாவட்டம் முழுவதும் சென்று பொருள் தண்ட வேண்டும். பிற மாவட்டங்களும் இதனைப் பின்பற்ற வேண்டும்' என்றுரைத்தபோது அவையோர் ஒப்புதல் அளித்தனர்.

தமிழ்வளர்ச்சி அடிப்படை :

உ.த.மு.க. கொள்கை பரப்புச் செயலர் புலவர் திரு. தமிழ்மாறன் இன உணர்வு கொளுத்தினர். 'பிற மொழிச்சொற்களை நீக்கி அவற்றிற்குப் பகரமாகத் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும்போது முதலில் இடர்ப்பாடு ஏற்படும்; நாளடைவில் தமிழ்ச்சொல் நிலைத்துவிடும். நான் படிக்கும்போது 'ஜில்லா' என்று சொன்னேன். இப்போது என் பிள்ளை 'மாவட்டம்' என்று படிக்கிறான். இதேபோல எல்லாச் சொற்களையும் நிலைப்படுத்திவிடலாம். நான் இங்கே தங்கியிருக்கின்ற இந்த இரண்டு நாள்களில் ஒரு தேர்வு நடத்தினேன். நேற்று உணவுக்கடையில் 'தேநீர்' கொண்டு வா என்று கேட்டேன். அவன் 'டீயா'? என்று கேட்டான். மீண்டும் இரண்டு தடவைகள் அக்கடைக்கே போய் 'தேநீர்' கொண்டு வா என்று கேட்டேன். எதிர் கேள்வி ஏதும் கேட்காமல் இன்முகத்துடன் தேநீர் கொண்டுவந்து கொடுத்தான். இதை ஏன் நீங்களும் பின்பற்றக் கூடாது. நாமே தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தத் தயங்கினால் வேறு யார் பயன்படுத்துவார்கள்?' என்று கேட்டார் அவர்.

சாதி ஒழிப்புப் பற்றி அவர் குறிப்பிடும்போது 'தமிழ்ச்சாதி ஒன்றே சாதி. நமக்குள் சாதி வேறுபாடு பார்க்கக்கூடாது. 3 விழுக்காடு இருக்கின்றவன் ஆள்கிறான். 97 விழுக்காடு உள்ள நாம் அடிமைகளாகக் கிடக்கிறோம். நாம் தாழ்த்தப்பட்டவர்களை மேலேற்ற வேண்டும் என்று சொல்கிறோமே தவிர மேலே இருப்பவர்களைக் கீழே தள்ள வேண்டும் என்று சொல்வதில்லை. நம்மை எதிர்ப்பவர்கள் இதைக் கருத்தில் கொள்ளவேண்டும். தமிழர் அனைவரும் ஒன்றுபடவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

குறும்பூர் உ.த.மு.க. அமைப்பாளர் திரு மலர் வேந்தன் பேசும்போது, 'இக் கூட்டத்திற்கு இவ் வட்டாரத்திலுள்ள தமிழாசிரியர்கள்கூட வரவில்லையே. ஆசிரியர்களே உணர்வுகுன்றி இருப்பாராயின் குமுகாயத்திற்கு அவர்கள் எவ்வாறு உணர்வு ஊட்டுவர்?' என்று வருத்தம் தெரிவித்தார்.

திரு பால்ராசேந்திரன் பேசும்போது ஈழத் தமிழர் நிலையைப்பற்றிக் குறிப்பிட்டார். 'இலங்கையின் தேயிலைத் தோட்டத்தில் தன் குருதியைச் சிந்திப் பாடுபடும் தமிழன் தன் உயிர் நீத்தபின் அத் தேயிலைச் செடிக்கே உரமாகிவிடுகிறான். இவ்வாறு உயிரையும் உடலையும் தான் வாழும் மண்ணிற்குக் கொடுப்பவன் அந்நாட்டின் நன்றி மறந்த அரசால் படும் துன்பங்களை எண்ணும்போது நம் நெஞ்சம் வெடிக்கிறது' என்று கூறினார்.

முகுந்தன் உரை :

அடுத்து, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் திரு முகுந்தன் உரையாற்றினார். ஈழத் தமிழர் கொண்டுள்ள இனவுணர்வை எடுத்துக் காட்டினார். 'உலகில் அமையும் தன்னாட்சித் தமிழகம் முதலில் ஈழத்தில்தான் அமையும். நாங்கள் ஆட்சி அமைத்தபின் எங்களுக்காக மட்டும் வாழமாட்டோம் உலகில் உள்ள தமிழர் அனைவர் நலத்திற்காகவும் குரல் கொடுப்போம். உலகின் எந்த மூலையில் எவர் நசுக்கப்பட்டாலும் நாங்கள் நாடு, இன, மொழி வேறுபாடு காட்டாமல், அவர் துன்பம் நீக்கப் பாடுபடுவோம்' என்று உறுதி அளித்தார்.

இதற்குள் மணி 2-ஐ நெருங்கவே பகல் உணவுக்காகக் கூட்டத்திற்கு இடைநேரம் கொடுக்கப் பட்டது. தலைவர் இதனை அறிவிக்கும்போது பிற்பகல் 3 மணிக்குக் கூட்டம் மீண்டும் தொடரும் என்றும் அறிவித்தார்.

உணவு உடனே உண்டு முடித்தபின்னர் உறுப்பினர்கள் ஓய்வு கொள்ளாமல் கலையரங்கில் திரண்டு குழுக்களாகப் பிரிந்து கருத்தாய்வு செய்தனர். கிடைத்த அந்தச் சிறிது ஓய்வையும் வீணாக்காமல் பயன்படுத்திக் கொண்ட உறுப்பினர்களின் இனவுணர்வு போற்றற்குரியது.

சொல்லாய்வறிஞர் அருளியாரின் ஆராய்ச்சியுரை:

தலைவர் அவர்களின் கண்டிப்பான அறிவிப்பின் படி சரியாக 3 மணிக்குப் பிற்பகல் கூட்டம் தொடர்ந்தது. சொல்லாய்வு அறிஞர் திரு. அருளியார் பிற்பகலில் பெரும்பொழுதை எடுத்துக் கொண்டார். தமிழ் மொழிச் சொற்கள் ஆங்கிலத்தில் அமைந்துள்ள பான்மையைத் தெளிவுற எடுத்துரைத்தார். அவர் பேச்சைக் கேட்டபோது, இவ்வளவு வளமுடைய தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் பிறமொழிகளைத் தேடி ஓடும் பேதைமையை பிற மொழிச் சொற்களைக் கலந்து பேசும் மடமையை, எண்ணி அவையோர் வெட்கினர். அரக்கு, அரத்தம் ஆகிய சொற்களின் வேரிலேயே ஆங்கிலத்தில் சிவப்பைக் குறிக்கும் 'Red' என்ற சொல் வளர்ந்தது என்று அவர் அளித்த விளக்கம் மிகச் சிறப்பாக இருந்தது. 'ரோ' என்ற ஓரெழுத்தொரு மொழியில் இருந்து 'அறிந்து கொள்' என்ற பொருளுள்ள நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்கள் எழுந்த வகையை வகுத்துரைத்தார்.

இவை போன்று பல தமிழ்ச்சொற்கள் கிரேக்கத்தில் கலந்து அங்கிருந்து இலத்தீன் வழியாக ஆங்கில மொழிக்குச் சென்ற வழியைக் காட்டினார்.

அவர் இவ்வாறு தமிழ்மொழியின் வளத்தை எடுத்துக்காட்டி, 'நாம் பிறமொழிகளைத் தேடிச் செல்லவேண்டிய தேவை இல்லை' என்று எடுத்துக் காட்டினார். அவர் உரையைச் செவிமடுத்த அவையோர் நம் தமிழ் மொழியின் வளம் தெரிந்து மகிழ்ந்தனர். மறைபட்டுக் கிடக்கும் உண்மைகளை வெளிக் காட்டிய அருளியாரைப் போற்றினர். இளம் அகவையில் அவரது ஆராய்ச்சித் திறனை வியந்தனர். மொழிநூல் பயின்ற புலவர்களுக்கு அவர் உரை தேனாய் இனித்தது.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

'விடுதலை'க்கு இவ்வளவு, உறைப்பான தமிழ்வளர்ச்சி நோக்கமெல்லாம் இல்லை என்பது நமக்குத் தெரியும். பொதுமக்களுக்குப் புரிய வேண்டும் என்ற ஒரு தந்திர உத்தியுடன் சில இயல்பான மொழிவளர்ச்சி நிலைகளைக்கூட 'விடுதலை' தான் திட்டமிட்டுத் தவிர்த்து வருகிறது. பார்ப்பனர்களுக்குக்கூட இவ்வளவு ஆழமான தமிழ்எதிர்ப்பு உணர்ச்சி இருப்பதில்லை.ஏனோ தெரியவில்லை 'விடுதலை'க்குஇருக்கிறது ஒருவேளை தமிழினம் இதிலெல்லாம் 'விடுதலை பெறுது' என்று அவ்விதழ் கருதுகிறதோ, என்னவோ?

'நம்மவர்கள், என்பதற்காக இதுநாள்வரை, இவ்வகையில், எவ்வளவோ உணர்வுகளை நாம் வெளிப்படுத்துவதில்லை; அதை நம் 'மெலிவு' என்றோ, அவர்களின் 'வலிவு' என்றோ 'விடுதலை' கருதிவிடாது என்று நம்புகிறோம்.

இனி, இச்சிறு செய்தியில், 'விடுதலை' பயன் படுத்திய வடசொற்களைப் பாருங்கள்.

குறைந்த மவுசு' பட்சம்', சதவிகிதம் (விழுக்காடு என்னும் சொல்லைப் பார்ப்பன இதழ்கள் கூடப்பயன் படுத்துகின்றன.) 'உபகாரச் சம்பளம்' (ஏன், உதவித் தொகை அல்லது உதவிச்சம்பளம் என்றால்,இவர்கள், என்றென்றும் 'பாமரர்'களாகவே இருக்க வேண்டும் என்பவர்களுக்கு விளங்காதோ?)

'விவசாயக் கல்லூரி' - (இதன் பெயரே தமிழில் வேளாண்மைக் கல்லூரி என்று வழங்குகிறது. நல்ல வேளை காலேஜ் என்பதைக் கல்லூரி என்றாவது எழுதியுள்ளதே, அதற்காகவேனும் நம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.)

எப்படியோ,தமிழைக் கெடுத்துத்தான் அல்லது, அடகு வைத்துத்தான் 'தமிழின முன்னேற்றம் ஏற்பட வேண்டும என்பதை 'விடுதலை' ஒரு கொள்கையாகவே வைத்திருப்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடிய வில்லை. அது, தாயையோ, மனைவியையோ அல்லது மகளையோ விட்டுக்கொடுத்தாவது குடும்பம் முன்னேற வேண்டும் என்று விரும்புகிற பரத்தமைத் தனமானது என்பது நம் கருத்து!

தமிழ் அழிவதிலும், அதை அழிப்பதிலும் 'விடுதலை' மகிழ்ச்சியடைகிறது. என்ன செய்வது? 0

உலகம் போற்றும் திருமறை வழங்கிய திருவள்ளுவர் புகழ் வாழ்க!

**பீர்பாத் முகவாண்மைக் கடைத்தெரு**

ஏரல்

எங்களிடம் காலகம்(சோடா), பிழிவு(கிரஷ்) பனிக்கட்டிக்குழுமங்கள், உரொட்டிக் கடைகள், இனிப்பகங்கள் முதலிய அனைத்து வாணிக நிலையங்களுக்கும் தேவையான பழச்சாறுகள் மனச்சாறுகள் கிடைக்கும்.

என்றும் புலராது, நின்றலர்ந்து
தேன் பிலிற்றும், திருக்குறள் வாழ்க!
திருவள்ளுவப் பேராசான் வாழ்க!

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்!

மருத்துவர் இரா. சானகிராமன் M.BB.S.(F.E.G.P.)

மருத்துவர் விமலா சானகிராமன்

உடனடி நோய்கள் எந்நேரமும் கவனிக்கப்படும்

**இராமச்சந்திரா மருந்தாய்வகம்**

RAMACHANDRA CLINIC

ஏரல்.

# கொற்கைத் தமிழ் மன்றத் தோற்றவளர்ச்சிப் பணிகள்


அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைஅமைந்த தண்டமிழ்நாட்டுச் செந்தமிழ் நிலவும் பாண்டிய நாட்டின் ஒல்காப் புகழ் கொற்கையம் பெருந்துறை கழகக் காலந்தொட்டே பாண்டிய நாட்டிற்குத் தோநகரமாகவும் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கியது என்பதைப் பலசான்றுகளால் நாம் அறியலாம். மேலும் இற்றைக்கு ஏறக்தாழ 4500 ஆண்டுகளுக்கு முன்னர் அகத்தியர், தொல்காப்பியர் உட்பட ஐம்பத்தொன்பது புலவர்கள் அமர்ந்து தமிழ் ஆய்ந்த இடைக்கழகம் இலங்கிய கபாடபுரமே கொற்கை ஆகும். வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈறுக 79 வேந்தர்கள் செங்கோலோச்சிய பெருமையுடையது கொற்கை. முத்துபடு பரப்பின் மூதூர் கொற்கை ஆகும்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கொற்கை இன்று தன் பெருமையிழந்து சிற்றூராகத் திகழ்கின்றது. இந்நாள் இங்குக் கடலெனத் திகழும் தெண்ணீர்க் குளமும் சமணத்தீர்த்தங்கரரின் அழகுமிகு சிலையும் அருண்மிகு ஈசுவரமுடையார் என்ற சுந்தரவிநாயகர் திருக்கோவிலும் கண்ணகி கோவிலாகிய வெற்றிவேலம்மைத் திருக்கோவிலும் முதுபெரும் வன்னி மரமும் உள்ளன.

கொற்கையின் பழம்பெருமையையும் இற்றைநாள் சிறப்பையும் உணர்ந்தே தமிழறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஒருங்குகூடிக் 'கொற்கைத் தமிழ்மன்றம்' என்னும் பெயரிய தமிழ்மன்றத்தைத் தோற்றுவித்தனர். அது தி.பி. உ௦௦அ மடங்கல் ௩௧ ஆம் பக்கல் (16-9-1977) வெள்ளிக்கிழமையன்று முதுபெரும் ஆசிரியர் திருமிகு கொ. சு. உலகசுந்தரம் அவர்கள் தலைமையிலும் சிறுத்தொண்ட நல்லூர் மூதபெரும்புலவர் திரு ச. சிவசங்கு அவர்கள் முன்னிலையிலும் நிறுவப்பட்டது. மன்ற அமைப்பு நெறிகள் படிக்கப்பட்டு ஏற்கப்பட்டன. புலவர் ச. சிவசங்கு, புலவர் க. ஐயாத்துரை, க.மு;கல்இ. இருவரும் மன்ற அமைப்பாளர்களாக அமர்த்தப்பட்டார்கள். இருவரின் இடையறு உழைப்பாலும் தமிழ் ஆர்வலர்களாலும் மன்றம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறை போல வளர்கின்றது. ஆண்டுதோறும் கடகத் திங்களில் ஆண்டுவிழாவும் சுறவத் திங்களில் திருவள்ளுவர் திருநாளும் முறையாகக் கொண்டாடப்பெறுகின்றன. ஏழாம் ஆண்டு நிறைவு விழாவில் திருவள்ளுவர் சிலை திறப்புவிழா நிகழ்ச்சி மன்றவளர்ச்சியின் வரலாற்றில் மிகமிக இன்றியமையாத அரியசெயலாகும்.

கொற்கைத்தமிழ்மன்றம்ஏன்தோன்றவேண்டும்? அஃது உடனடியாகத் தோன்ற இயலுமா? தோன்றினால்அது தொடர்ந்துநிலைத்து நின்றுபணி செய்ய இயலுமா? என்பனபோன்றவினக்கள் இவ்வட்டாரத்தின் மக்கள் உள்ளங்களில் எழுந்தன. ஆயினும் அவை நீங்குவதற்கான கரணியங்கள் தமிழ்ஆர்வலர்களின் நெஞ்சங்களில் நிலைத்து இருந்தன. அடிப்படைக் கருத்துகள் ஏற்பட இம் மன்றம் தோன்றுவதற்கு முன்னர் சுற்றுவட்டாரத் தமிழன்பர்கள் ஏரலில் திருக்குறள் மன்றம் ஒன்றை ஏற்படுத்தினர்கள்.



திருவள்ளுவர் சிலையருகில்
கொற்கைத் தமிழ்மன்றத்
தலைவர் புலவர் சிவசங்கும் (வலம்)
செயலர் புலவர் ஐயாத்துரையும் (இடம்)

சிறந்த தமிழறிஞர்களான மொழிஞாயிறு தேவநேயப்பாவணர், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமி, பண்டாரகர் இராசமாணிக்கனார், முதுபெரும் புலவர் நடேசனார் போன்றவர்கள் இங்கு வருகை தந்த நல்ல கருத்துகளைக் கூறித் தமிழுணர்வை மக்களிடையே ஊட்டினார்கள். மக்கள்பால் தமிழுணர்வு தோன்றியது. அரசியல் தலைவர்களில் சிலர் ஊட்டிய தமிழின உணர்வு மன்றம் தோன்றுவதற்கும் ஓர் கரணியமாகும். ஏரலுக்கு அண்மையிலுள்ள இன்றைய சிற்றூர் — ஆனால் பண்டைய பேரூர் ஆன கொற்கையின் பழம்பெருமையை 'மக்களிடையே வரலாற்றுணர்வோடு ஊட்டித் தமிழனின் தொல்பெரும் சிறப்பை இளைஞர்களிடம் பரப்பி எழுச்சி பெறச் செய்தல் வேண்டும் என்பது மன்றத்தின் நோக்கமாக அமைந்தது. கொற்கை விளைந்தால் ஒக்க விளையும் என்பது முதுமொழி. கொற்கை வட்டாரம் நல்ல விளையுளைப்பெறின் சுற்றுவட்டாரமும் நல்ல விளையுளைப் பெற்றுச் செழிப்பு அடையும் என்றது அம் முதுமொழியின் உட்கிடக்கை. அதனை உணர்ந்தே இதனைத் தொடங்கினேம். நினைத்த எண்ணம் திருவருளால் வீண்போகவில்லை என்பதனைத் திருவள்ளுவர் சிலைதிறப்பு விழாவில் பங்குபெற்றோர் உணர்ந்துகொள்வர் என்பது திண்ணம். தமிழ்உணர்வு முதலில் தோன்றச் செய்தல்-பின்னர் இன உணர்வு ஊட்டல்—இறுதியில் நாட்டுணர்வு நாட்டுதல். இவ் வடிப்படையில் அறிவியல் உணர்வுடனும் இயற்கை நெறிப்பாங்கிலும் வரலாற்று அடிப்படையிலும் மன்றம் செயல்பட வேண்டும் என்பது மக்கள் கருத்தாகும். இவையே மன்றம் தோன்றுதற்குரிய அடிப்படைக் கரணியங்கள் ஆகும். தம் வாழ்நாள் வரை மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் மன்றத்தின் சிறப்புத்தலைவராக விளங்கினர்கள்.

மன்றம், அதுதோன்றிய ஏழுஆண்டுகளில் குறிப்பிடத்தக்க ஆக்கப்பணிகளைச் செய்துள்ளது. 1. திருக்குறள் கருத்துகளை மக்கள் உணர்ந்துகொள்ள கரும்பலகையில் எழுதிப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல். 2 இலக்கிய அறிவு ஏற்படத் தொடர் சொற்பொழிவுகள் நடத்துதல். திருக்குறள் தொடர் வகுப்பு, பத்துப்பாட்டுத் தொடர் சொற்பொழிவு, பெரியபுராணம் தொடர்சொற்பொழிவு, சிலப்பதிகாரத் தொடர் பொழிவு, திருமந்திரத்தொடர் சொற்பொழிவு முதலியவை நிகழ்த்தி இலக்கிய அறிவு உணர்வையும் தமிழின உணர்வையும் ஊட்டியது. 3. மாலை நேரச் செந்தமிழ்க்கல்லூரியைத் தோற்றுவித்துத் தமிழ்ப் புலவர் சிலரை உருவாக்கியது. 4 1977 ஆம் ஆண்டு நிகழ்ந்த தமிழ்நாட்டுப் புயல் வெள்ளத்துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்டுத் துணிகளைப் பொதுமக்களிடம் நன்கொடையாகப்பெற்று முன்னாள் உணவு அமைச்சர் திரு எட்மண்ட் அவர்களிடம் கொடுத்தது. 5. கொற்கைச் சிற்றூருக்குப் பேருந்து வண்டி ஏற்பட மன்றம் அயராது பாடுபட்டு வெற்றி கண்டது. 6. ஆண்டுதோறும் ஆண்டுவிழா நடத்தி மாணவர்களுக்குப் பல்வகைப் போட்டிகளை நிகழ்த்திப் பரிசுகள் வழங்கியது. 7. முதுபெரும்புலவர் நடேசனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார், கழகச்செம்மல் புலவர் இளங்குமரன் போன்றவர்கள் ஆண்டு விழாக்களில் தலைமைதாங்கிப் பேருரை ஆற்றச் செய்தமை. 8. முதுபெரும்புலவர் நடேசனார் அவர்களுக்குப் பவளவிழா கொண்டாடி ஏழை எளிய மக்களுக்கு உண்டிக் கொடை வழங்கியது. 9. தமிழ்ச் சான்றோர்களைப் போற்றிப் பொன்னாடை போர்த்துதல் 10. தமிழ் உணர்வு ஏற்படவும் தமிழில் நல்லதேர்ச்சிஅடையவும் சுற்றுவட்டார மாணவர்களுக்குத் தமிழ் வகுப்பு ஏற்படுத்துதல். 11. தமிழர் சமயங்களான சிவனியம் திருமாலியம் வளர்க்கத் தமிழறிஞர்களை அழைத்து வெள்ளிக் கிழமை தோறும் தொண்டாற்றுதல். 12. மாணவர்களிடையே சொல்லாற்றலையும் தமிழுணர்வையும் வளர்க்க வேண்டும் என்னும் நோக்கத்தில் புதிதாக மாணவர் தமிழியல் அரங்கம் தற்போது செயல்பட்டு வருகின்றது. அஃது உலகத் தமிழினக் கருத்துக்கேற்பச் செயல்படுகின்றது. 13. ஏழாம் ஆண்டு விழாவில் மாணவர்களுக்கு இலவயச்சீருடை 12-8-84 இல் வழங்கப்பட்டது

கொற்கைத் தமிழ்மன்றத் தோற்ற வளர்ச்சியில் இவ்வாண்டு 11-8-84 இல் நிகழ்ந்த திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மிகவும் குறிப்பிடத் தக்க வரலாற்றுச் சிறப்புடையது. மன்றத் தலைவர் முதுபெரும் புலவர் ச. சிவசங்கு, மன்றச் செயலர் புலவர் க. ஐயாத்துரை, க.மு; கல்.இ; மன்றத்தாளாளர் அ.இரா.க. அருணசலனார் ஆகியோரின் சிலை அமைப்புப்பங்கு மிகவும் போற்றுதற்குரியது. திருவள்ளுவப் பெருமானின் அழகிய சிலைத்திருவுருவத்தை மைலாடி சிற்பி.கு.நல்லதாணு அமைத்தார். சென்னை இலயோலா கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பண்டாரகர் க.ப.அறவாணன் அவர்கள் தலைமையில் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மாபெரும் ஊர்வலத்தோடு விழாப் பந்தலை அடைந்த பல்லாயிரக்கணக்கானமக்கள் எழுப்பிய "திருவள்ளுவர் வாழ்க" என்னும் பேரொலி விண்ணை முட்டியது. மூவேந்தர் அமர்ந்த யானை அணிவகுப்பு, வடவரை வணக்கிய சேரன் செங்குட்டுவன் காட்சி, திருக்குறள் அரங்கேற்றக் காட்சி, சிலம்பாட்டக் காட்சி, தமிழ்த்தாய் திருவுருவக் காட்சி முதலியவை ஊர்வலத்தில் இடம் பெற்றதைக் கண்டு வியவாதார் யாருமிலர்? என்னே ஊர்வலச் சிறப்பினோடு அமைந்த திருவள்ளுவர் சிலை திறப்பு விழா! வாழ்த்துரை வழங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர் அருள்தந்தை நவமணி அடிகளார், பொறியிலர் ஞானதோமா ஆகியோர் ஆவர். புலவர் தமிழ்மாறன் ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்திய பாங்கு போற்றுதற்குரியது.

கொற்கைத் தமிழ்மன்றம் தோன்றிய நாள் தொட்டே கொற்கையைச் சுற்றுலா இடமாக ஆக்க வேண்டுமெனப் பலமுறை வேண்டுகோள்களைத் தமிழக அரசுக்கு விடுவித்துள்ளது. அதன் பயனாகத் தொல்பொருள் ஆய்வு தொடர்பு அலுவலகம் இங்குள்ளது. நெல்லை மாவட்டம் இருமாவட்டமாகப் பிரிக்கப்பட இருக்கின்றது. கீழ்ப்பகுதியான தூத்துக்குடியைச் "வ.உ. சிதம்பரனார் மாவட்டம்" என அரசு அறிவித்துள்ளது. பழம் பெருமையை நினைவூட்டும் வகையில் தற்போது அமைந்துள்ள கொற்கைக்குக் கிழக்கே திருச்செந்தூர்-தூத்துக்குடி சாலையில் முக்காணிக்கும் பழையகாயலுக்கும் இடையில் புதிய தலைநகர் கொற்கையைத் தோற்றுவிக்கத் தமிழக அரசை இம் மன்றம் வேண்டுகின்றது. ஏரல் வட்டாரத்தைக் கொற்கை வட்டம் எனப்பெயரிட்டு ஏரலை வட்டத் தலைநகராக ஏற்படுத்த இம்மன்றம் அரசைக் கேட்டுக் கொள்கின்றது.

திருவள்ளுவர் சிலைக்குப் பொருளுதவி புரிந்த தமிழ்ச் சான்றோர்களை நன்றிகூறிப் பாராட்டுகின்றது. கொற்கைத்தமிழ் மன்றம். மன்றத்தின் தலைவர், புலவர் ச. சிவசங்கு, செயலர் புலவர் க. ஐயாத்துரை க.மு; கல்.இ இருவரின் ஏழாண்டு முழுநேர அருபணியைப் பொதுமக்கள் போற்றுகின்றனர். மன்றத்தின் பெருமையையுணர்ந்த பெரியோர்கள் ஏரலில் திருமண மண்டபம் ஒன்று அமைய பெருவிருப்பம் தெரிவித்துள்ளனர். மக்கள் தொண்டு மாபெரும் தொண்டெனக் கொற்கைத் தமிழ்மன்றம் கருதுகின்றது.

வெல்க தமிழ்! ஓங்குக கொற்கையின்புகழ்.

— புலவர்.க.ஐயாத்துரை,க.மு;கல்.இ;செயலர்,

### தற்போதைய மன்றப் பொறுப்பாளர்கள்

1. புலவர். ச. சிவசங்கு, — தலைவர்
2. புலவர். க. ஐயாத்துரை,க.மு; கல்.இ — செயலர்.
3. து.வில்சன் வெள்ளையா,க.இ;கல் இ. — பொருளர்
4. புலவர்.அரசதேவநேயன், இல.இ - துணைச்செயலர்.
5. யா. பாக்கியராசு, க.மு; கல்.மு. — தணிக்கையர்
6. அ.இரா.க.அருணசலனார் — தாளாளர்.


திருவள்ளுவப் பெருமான் சிலைவைத்து
விழாவெடுத்த, ஏரல் கொற்கைத்
தமிழ்மன்றத்திற்கு எங்கள் வாழ்த்துகள்!

## இல. ஆனந்தனர்

சவளிக் கடை, ஏரல்

உவப்பூட்டும் திருவள்ளுவர்
சிலையைக் காணுங்கள்!

களிப்பூட்டும் ஆனந்தனர்
கவின்மிகு ஆடைகளை அணியுங்கள்!



ஞாலம் அழியினும் கோலம் அழியாத
செந்தமிழ்த் திருமறை வழங்கிய திருவள்ளுவர்
பெருமானுக்குச் சிலைவைத்துப் பெருமைப்
படுத்திய ஏரல் கொற்கைத் தமிழமன்றத்
தார்க்கு எங்கள் வாழ்த்துகள்!

## அருணா கபே

சைவ உணவகம் ஏரல்
உரிமையாளர்
அ. ஆனையப்பன்

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனி, இவ்வாறெல்லாம் ஏன் நடக்கின்றது? அதுதான் நம் இந்திய அமைப்புச் சட்டத்தில் உள்ள ஓட்டைகள்! அவை அடைக்கப்படும் வரையில், அல்லது அழிக்கப்படும் வரையில் இப்படிப்பட்ட - குடியரசுத் தன்மையையே குழிதோண்டிப் புதைக்கத் தக்க - நேர்மை, நயன்மை - இவற்றுக்கே மாறுபாடான - செயல்கள் நடந்து கொண்டேதான் இருக்கும்! இதை யாரும் தடுக்கவே முடியாது!

அத்தகைய ஓட்டைகளில் எந்த ஓட்டை 'இராம்லால்'களுக்கும், 'சிரிபிரகாசா'க்களுக்கும், 'அனந்த சயனங்'களுக்கும், 'சம்பூரணானந்து'களுக்கும், சங்கர தயாள்சர்மா'க்களுக்கும், வழியைக் காட்டிக் கொடுக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

இதோ, அந்த அமைப்புச் சட்டத்தில் உள்ள 164-ஆம் பிரிவு என்னும் ஓட்டைதான்! அந்தப்பிரிவு கூறுவதைக் கவனியுங்கள்!

"முதல் அமைச்சரை, அந்த மாநில முதல்வர் ஆளுநர் அமர்த்த வேண்டும். மற்ற அமைச்சர்களை முதல்வரின் கருத்தைக்கேட்டு, அதன்படி ஆளுநர் அமர்த்த வேண்டும். ஆளுநர்க்கு நிறைவளிக்கின்ற வரை அவர்கள் அந்தப் பதவிகளில் இருக்க வேண்டும். (shall hold office during the pleasure of the governor)

— இதில், ஆளுநர் தமக்கு நிறைவளிக்காதவரை (அஃதாவது தாம் விரும்பாத ஒருவரை உடனே தள்ளலாம்; அல்லது வெளியேற்றலாம்; அல்லது கவிழ்க்கலாம்! தமக்கு நிறைவளிக்கின்ற அஃதாவது தாம் விரும்புகின்ற ஒருவரை, உடனே முதலமைச்சர் ஆக்கலாம்! இதில் தலையிட எவருக்கும் உரிமையில்லை. அச்செயல் அவர் தன்விருப்பப்படி செய்வது. அதற்கு நம் அரசியல் அமைப்புச் சட்டம் முழு இடம் தருகிறது.

இனி, அடுத்தபடி நீங்கள் கவனிக்க வேண்டியது இன்னொன்று. அதுதான் இதைவிட மூகாமையானது. அஃதென்ன?

அதுதான், பெரும்பான்மையுள்ள கட்சியில் உள்ள ஒருவரைத்தான் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது சட்டத்தில் சுட்டப் பெறவில்லை என்பது.

ஆளுநர் (கவர்னர்) என்ற யானை விரும்பினால் 'சரசுவதி சபதம்' என்னும் திரைப்படத்தில் வருவது போல, தெருவில் போகும் இரந்துண்ணும் பைத்தியக்காரர் ஒருவனுக்குக்கூட, மாலையிட்டு, முதலமைச்சர் ஆக்கலாம். அதற்கு நம் அரசியல் சட்டம் இடம் தருகிறது! ஆம்! உண்மை! நம்புங்கள்! ஆளுநர் உண்மையிலேயே அதைச் செய்தால், எவரும் எதுவும் அவரைத் தடுக்க முடியாது! நம்(!) இந்திரா காந்தியைத் தவிர. அஃதாவது நம் சட்டப்படி!

எப்படியிருக்கிறது நம் குடியரசமைப்பின், அழகு! ஒழுங்கு! இதுதான் நம்(!) இந்தியா! இதற்குப் பெயர்தான் அரசியல்! மாந்தன் அல்லது இந்தியன் என்றால், நம் அனைவருந்தானே! முட்டாள், அறிவாளி, பித்தன், கோழை, வீரன், படித்தவன், படிக்காதவன், காமுகன், கயவாளி-என்று வேறுபாடா இருக்கிறது? நாம் அனைவரும் இந்தியர்தாமே! அதிலென்ன வேறுபாடு! அப்படியேதான் நம் அரசியல் சட்டமும், அதை ஆளுகின்ற நம் தலைவர்களும்!

வல்லதிகார வெறியும், சட்டச் சூழ்ச்சிகளும், பணமும் சேர்ந்துகொண்டால், நாம் குடியரசு அமைப்பையே உடைத்துவிட முடியும்! ஆனால் எப்படியாவது அந்த உயர்ந்த நாற்காலியில் நாம் போய் ஒருமுறை அமர்ந்து கொள்ள வேண்டும்!

இதற்கு ஒரு முடிவே இல்லையா? ஏன் இல்லை! தேசிய இனப் போராட்டம் ஒன்றுதான்—நாட்டுப் பிரிவினைதான் இதற்கு முடிவு கட்டமுடியும்! மற்றபடி மாநிலத் தன்னாட்சி 'இன்னாட்சி' என்று சொல்வதெல்லாம் கூட, இந்தியெதிர்ப்பு போல் பணஞ்சுரண்டும் ஓர் ஏமாற்றுச் சூழ்ச்சியே!

இப்பொழுது சொல்லுங்கள்!

தம் என். டி. இராமராவின் அமைச்சரவை கவிழ்க்கப்பட்டது சரியா? தவறா? அதைக் கவிழ்த்த இராம்லால்களும் இந்திராக்களும் என்றென்றும் வாழ்க! வாழ்க! அதற்கு நம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டங்களும் என்றென்றும் துணை செய்கவே!

(6-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

பாவலரேறு :

கடைசியில் பாவலரேறு அவர்கள் உரையாற்றப் புகுந்தார்கள். மாலையாகிவிட்டமையால் ஐயா அவர்கள் தமது பேச்சைக் குறைத்துக்கொண்டார்கள். எனினும் அவரது ஒவ்வொரு சொல்லும் மணியாகவே அமைந்திருந்தது

ஐயா அவர்கள் தமது பேச்சில் தமிழர் நிலை குறித்துத் தமது ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள். தமிழர் இன உணர்வு கொள்ள வேண்டிய கட்டாயத்தை வலியுறுத்தினார்கள். தமிழ் மொழியையும் இனத்தையும் அழிப்பதற்கு மாற்றார் எடுத்துக்கொள்ளும் முயற்சியை இனம் காட்டினார். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற வகையில் அருகே கிடந்த ஆங்கில நாளிதழ் ஒன்று அவர் பேச்சின் பொருள் ஆயிற்று. தமிழ்நாட்டுத் தாளிகைகள் எல்லாம் மாற்றார் கையில் சிக்கிக்கொண்டு தமிழுக்கும் தமிழர்க்கும் செய்யும் இடையூறுகளை எல்லாம் எடுத்துக்காட்டினார். தமது பேச்சில், 'இக்குறைபாட்டை நீக்க நமக்கு ஓர் ஆங்கிலச் செய்தித்தாள் தேவை. நாமே ஆங்கிலச் செய்தித்தாள் ஒன்று நடத்தவேண்டும்.

உலகில் பெரும்பாலான மக்கள் தமிழினம் என்று ஒன்று இருக்கின்றது என்பதை அறியாமலேயே இருக்கிறார்கள். ஈழத்தமிழர் போராட்டத்தின் பயனாகவே தமிழ் இனம் இருப்பதை இக்கால் அறிய முற்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு தொடர்புடைய தாய்த்தமிழகமும் ஒன்று இருக்கின்றது என்பதையும் அவர்கள் அறிந்து வருகிறார்கள். வெளிநாடுகளில் இருக்கும் இந்தியத் தூதரகங்கள் எல்லாம் திட்டமிட்டு இந்தியச் செய்திகளை மறைத்து வெளியிடுகின்றன. இந்திய மக்கள் அனைவரும் இந்தி மொழி ஒன்றினையே பேசுவது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி இருக்கின்றன. இந்தியாவில் தமிழ் போன்று பிற மொழிகளும் இருக்கின்றன என்ற உண்மை உலக மக்களுக்குத் தெரியாது'

இந்நிலையை நாம் கட்டாயம் மாற்றியாக வேண்டும். அதற்கு நமக்கென்று ஆங்கிலச் செய்தித்தாள் தேவை. அதை நாம் கட்டாயமாக உலகமெங்கும் அனுப்பித்தர வேண்டும். உலகம் எங்கும் வாழும் தமிழ்மக்கள் அதனை வாங்கி உலகம் முழுவதும் படிக்கச்செய்தால்தான் நம்மைப் பற்றிய உண்மைகள் உலகிற்குத் தெரியும்' என்று எடுத்துரைத்தார்.

இரவு நிகழ்ச்சிக்கு நேரம் நெருங்கிவிட்டபடியால் ஐயா அவர்கள் தமது பேச்சை நிறுத்திக் கொண்டனர்.

கூட்டம் நிறைவுபெற்றது :

இறுதியில் யா. பாக்கியராசு நன்றி கூறினார். தமது நன்றி உரையில், 'ஐயா அவர்களுக்கு ஏரலோடு நெருங்கிய தொடர்பு உண்டு. சென்ற முறை ஏரலுக்கு வந்திருந்தபோதுதான் 'இனி இன்றைய தலைவர்களை நம்பிப்பயனில்லை. தமிழ் விடுதலைக்கு நாமே முயன்றால்தான் முடியும்' என்ற எண்ணம் எழுந்தது. அதன் விளைவாகவே உ. த. மு. க. தோன்றியது' 'ஆங்கிலச் செய்தித்தாள் நடத்த வேண்டும் என்ற எண்ணம் எழுந்திருக்கிறது. இதுவும் உறுதியாக வெற்றிபெறும்' என்று வாழ்த்தினார் அருளி அவர்களின் ஆய்வுரையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தபோது, 'பாவாணர் மறைந்ததினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப மற்றொரு இளஞாயிறு எழுந்திருக்கிறது' என்று வாழ்த்தினார். கருத்தரங்கத் தலைவருக்கு நன்றி, தெரிவித்தபோது தலைவர் அவர்கள் பாவேந்தர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கும் முயற்சியைப் பாராட்டி அந்நூல் உலகமெங்கும் சென்று பாவேந்தர் புகழ் பரப்பவேண்டும் என்று வாழ்த்தினார்.

விழா சிறப்புற நடைபெற உதவியாக இருந்த ஏரல் அருள்மிகு சேர்மன் கோயில் மரபு முறை அறங்காவலர் திருவாளர் அருணாசலனார் அவர்களுக்கும் மற்றும் கருத்துரை வழங்கிய பெருமக்களுக்கும் நன்றி கூறினார்.

மாலை 6-30 மணிக்குக் கருத்தரங்கம் நிறைவெய்தியது' 0

---

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்க்
களைகட் டதனொடு நேர்.
— ஆனால், வேந்தனே கொலையாளியானால்!

# கொற்கைத் தமிழ் மன்ற— ஏழாம் ஆண்டு நிறைவு விழா

கொற்கைத் தமிழ்மன்றத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு விழா 12—8—84 ஞாயிறு இரவு 7 மணிக்கு அருள்மிகு உச்சினி மாகாளி அம்மன் திருக்கோயில் வளாகத்தில், திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரிப் பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் பர். மா. பா. குருசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மன்றத் துணைச் செயலர் புலவர் அரச. தேவமித்திரன் அனைவரையும் வரவேற்றார். மன்றச் செயலர் புலவர். க. ஐயாத்துரை க.மு;கல்.இ ஆண்டறிக்கை படித்தார்.

பின் திருநெல்வேலி மாவட்டத் தமிழாசிரியர் கழக மேனாள் தலைவர் புலவர் இராமசாமி, திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் பாசுகர பால் பாண்டியன் கி. ஆழ்வார் வாழ்த்தினார்கள்.

முதல்நாள் கூட்டத்தில் (சிலை திறப்பு விழாவில்) பேசிய அருள்மிகு நவமணி அடிகளாரும் வாழ்த்தினார். அவர் தமது பேச்சில், 'நேற்று இரவு நான் நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டு வீட்டுக்குச் சென்றபின் எனக்குத் தூக்கம் வரவில்லை. இத்தகைய நல்ல முயற்சிக்கு நாம் உதவி எதுவும் செய்யவில்லையே என்ற எண்ணம் என்னை வாட்டியது. அதனால் நான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். என் பங்காக இந்தத் தங்கத் தொடரியை அன்பளிப்பாகக் கொடுக்கிறேன். இதைக் கொண்டு திருவள்ளுவர் சிலையைச் சுற்றி வேலி அமைத்து ஒரு பூங்காவும் அமைத்துக்கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டுத் தன் கழுத்தில் குருசுகம் (சிலுவை) அணிந்திருந்த தங்கத் தொடரியைக் கழற்றிச் சிலுவையை மட்டும் எடுத்துக் கொண்டு தொடரியை மன்றத் தலைவர் புலவர் சிவசங்குவிடம் கொடுத்தார்.

மக்கள் ஆரவாரம் செய்தனர். எதிர்பாராத வகையாக வந்து, தாம் அணிந்திருந்த தங்கத் தொடரியையே திருவள்ளுவர் சிலைப் பாதுகாப்புக்கு அளித்த அடிகளாரின் அருள் உள்ளத்தையும் தமிழ்ப் பற்றையும் போற்றாதார் எவரும் இல்லை.

மன்றத் தலைவர் புலவர் சிவசங்கு அவர்களும் தங்கத் தொடரியை விற்றுக்கிடைக்கும் பணம் அடிகளார் அருளியவாறு திருவள்ளுவர் சிலையைச் சுற்றி மதில் அமைக்கப் பயன்படுத்தப்படும் என்று விழா மேடையில் உறுதி அளித்தார்.

சிறுத்தொண்ட நல்லூரைச் சார்ந்த சென்னை வணிகர் ஐ. சிவசுப்பிரமணியனார் அளித்த இலவயச் சீருடைகளை அருட்தந்தை நவமணி அடிகளார் சிறுத்தொண்ட நல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்கள். இது கொற்கைத் தமிழ் மன்றத்தின் அரிய முயற்சியாகும்.

அதன்பின்னர் இரவு 10 மணியளவில் சொல்லாய்வு அறிஞர் அருளி அவர்கள் 'வள்ளுவர் காட்டிய அரசியல்' என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். பின்னர் உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு ஐயா அவர்கள் பேருரை, கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்தது. ஐயா அவர்களின் கருத்துகளைக் கேட்டவர்கள் பெரிதும் போற்றி வியந்தார்கள்.

பின்னர் சிறுத்தொண்டநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், 'நட்புக்கு விலை உயிரா?' 'தமிழுக்கு விலை தலையா?' என்னும் இரு நாடகங்களை நடித்துக் காட்டினர். அவை மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியதோடல்லாமல் தமிழின உணர்வையும் ஊட்டின. தலைமை உரைக்குப் பின்னர் மன்றப் பொருளர் திரு. து. வில்சன் வெள்ளையா க.இ; கல் இ அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். ஏழாம் ஆண்டுவிழா நிறைவு பெற்றது

மறுநாள் பாவலரேறு அவர்கள் தம் குடும்பத்துடன் பகலுணவுக்குப் பின்னர் ஏரலிலிருந்து சென்னை புறப்பட்ட பொழுது புலவர் ச.சிவசங்கு, புலவர் க. ஐயாத்துரை சேரமசுந்தரம் ஆகியோரும் தமிழன்பர்களும் திரளாகக் கூடியிருந்து வழியனுப்பி வைத்தனர். 0

---

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

## உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் புரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.


அஞ்சல்-அஞ்சல்

அனுப்புதல்:
**தமிழ் நிலம்**
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பலலடம் மா. ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.